# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XII இதழ்: 12 | ஜூன் 2026 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XII Issue: 12 | June 2026 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20







12ம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ்!



நம்பிக்கை தரும் மாற்றம்!
- ஆசிரியர் கடிதம்



தமிழுக்கு பெருமை சேர்க்கும் பக்ரைன் வாழ் தமிழர்!



நோய் தடுத்து நலம் காக்கும் உணவுகள்!

தொடரும் நீட் தேர்வு முறைகேடு: உச்ச நீதிமன்றம் தலையீடு!



தமிழ்நாட்டில் எபோலோ வைரஸ் பரவுகிறதா!

நாளைய தீர்ப்பு (1992) முதல் மக்கள் தீர்ப்பு (2026)வரை!
- முதல்வர் விஜய் அவர்களின் அசாத்திய வளர்ச்சி!




# நம்பிக்கை தரும் மாற்றம்!

**அ**ன்புடையீர் வணக்கம்!

இதே ஜூன் மாதம் 2015ல் மித்ரா டைம்ஸ் மாத இதழ் துவக்கப்பட்டது. தொடர்ந்து 11 ஆண்டுகாலம் நிறைவடைந்து 12 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் மாத இதழை இடைவிடாமல் நடத்தி வருவதில் பெருமைப்படுகிறோம். எந்தவித வருமானமும் இல்லாமல் ஒரு பத்திரிக்கை நடத்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல என்பதை பத்திரிக்கை உலகில் உள்ளவர் நன்கு அறிவார்கள்.

மித்ரா குழும நிறுவனத்தின் சார்பில் இது வெளிவருகிறது. என்னை பொறுத்தவரையில் நான் ஆரம்பத்தில் 25 கட்டுமானத்துறையில் ஆண்டு காலம் தடம் பதித்து குறிப்பிடத்தக்க அளவுக்கு அந்தத்







துறையில் வளர்ந்து வந்த நேரத்தில் நண்பர் ஒருவருக்காக இந்த மாத இதழ் துவக்கப்பட்டது. ஆனால் சில நாட்களில் அவர் வெளியே சென்றுவிட , எடுத்த காரியம் எதையும் நிறுத்தாமல் தொடர்ந்து நடத்துவது என்ற எனக்கு உள்ள தனிப்பட்ட கொள்கையின் அடிப்படையில் மித்ரா டைம்ஸ் மாத இதழை தொடர்ந்து நடத்துவது என்று முடிவெடுத்து 11 ஆண்டு காலமாக தொடர்ந்து நடத்தி வருகிறோம். எங்கள் மாத இதழின் முதல் அட்டைப்படம் அப்போதைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் படம் இடம் பெற்றது. அன்று தொடங்கி இன்று வரை ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி, மு. க. ஸ்டாலின், ஜோசப் விஜய் என்று நான்கு முதலமைச்சர்களை பற்றி சிறந்த முறையில் செய்தி

வெளியிட்டு வந்திருக்கிறோம். எப்போதும் அரசுக்கு எதிரான எந்த செய்தியையும் வெளியிடுவதற்கு நான் ஆசிரியர் குழுவுக்கு அனுமதி தருவதில்லை.




அரசியல் ரீதியாக மட்டுமல்ல சமூகத்தில் யாருக்கும் எதிராக யாருக்கும் விரோதமாக செய்திகளை போடக்கூடாது என்கிற ஒரு கொள்கையை வைத்திருந்து இதுவரை அதை கடைபிடித்து வருகிறோம். யாரையும் தரக்குறைவாக விமர்சித்து எழுதுவது எங்கள் நோக்கம் அல்ல. அதே நேரத்தில் சமூகத்துக்கு பங்காற்றுகின்ற தொண்டாற்றுகின்ற யாராக இருந்தாலும் அவர்களை அடையாளம் காட்டி மற்றவர்களுக்கு அவர்களை முன்னுதாரணமாக பின்பற்ற வைக்கும் கடமையை மித்ரா டைம்ஸ் தவறாமல் செய்து வருகிறது.







மித்ரா டைம்ஸ் மாத இதழ் வெளியான ஒரு சில தினங்களில் சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்துள்ள மாண்புமிகு நீதியரசர்கள், ஐ ஏ எஸ் அதிகாரிகள், அரசு அலுவலர்கள், திரைப்பட துறையினர், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோருக்கு தபால் மூலம் அனுப்பப்படும் புத்தகத்தை பார்த்துவிட்டு எங்களோடு கருத்து பரிமாறி கொள்வார்கள் என்பது இந்த மாத இதழுக்கு கிடைத்த அங்கீகாரம் . பத்திரிகைகளுக்கு உரித்தான விளம்பரம் சந்தா போன்ற வருமானம் ஏதும் இல்லாமல் இந்த மாத இதழை நடத்தி வருகிறோம்.

இந்த மாத இதழில் இடம் பெறும் ஆசிரியர் கடிதம் "என் எண்ணம்"என்ற பகுதி குறிப்பாகவும் சிறப்பாகவும் அனைவரையும் ஈர்க்கச் செய்து வருகிறது என்பதை நாங்கள் அறிகிறோம்.



அதனால்தான் என் எண்ணம் கடிதத் தொகுப்பை இரண்டு பாகங்களாக தொகுத்து புத்தகத்தை வெளியிட்டோம். அந்த வெளியீட்டு விழாவில் மாண்புமிகு நீதியரசர்கள் திரு டி.என்.வள்ளிநாயகம், திரு.எஸ்.கே கிருஷ்ணன், மற்றும் தொழிலதிபர்கள் நண்பர்கள் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். புத்தகங்கள் பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றாலும் இப்போது இருக்கின்ற இணையதள சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் தாக்கங்கள் அதிகமாக உள்ளன. அந்த வகையிலும் YouTube மூலமாக தொடர்ந்து எனது கருத்துக்களை நான் பதிவு செய்து வருகிறேன். சமீபத்தில் நம்முடைய தமிழக முதல்வர் திரு.ஜோசப் விஜய் அவர்கள் 717 மதுக்கடைகளை மூடச் சொல்லி வெளியிட்ட உத்தரவை நாம் பாராட்டி இருக்கிறோம். 1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி



வெளியேற்றப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் 2026 வரை தொடர்ந்து தி.மு.க, அ.தி.மு.க மாறி மாறி 59 ஆண்டுகள் ஆண்டன. ஆனால் 2026 சட்டமன்றத் தேர்தலில் திரு ஜோசப் விஜய் அவர்கள்



என் எண்ணம் முதல் தொகுப்பு வெளியீட்டு விழாவில் மாண்புமிகு நீதியரசர்கள் திரு.டி.என்.வள்ளிநாயகம், திரு.எஸ்.கிருஷ்ணன், தொழிலதிபர் ஜி.மணிலால் ஆகியோருடன் ஆசிரியர் எம்.எஸ். மூர்த்தி.

தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் பெரும்பான்மையிடங்களை பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது. இது பெரிய வரலாற்று மாற்றம் என்பதை யாரும் மறுக்க முடியாது. என்னதான் திராவிட கொள்கைகளை தாங்கி இந்த ஆட்சி நடக்கிறது என்று சொன்னால் கூட இரண்டு கட்சிகளை எதிர்த்து இதுவரை யாரும் அரசியலில் வெற்றி பெறாத சூழலில் ஜோசப் விஜய் அவர்கள் வெற்றி பெற்றது வரலாற்று சிறப்புமிக்க வெற்றியாக தான் பார்க்க வேண்டும். இரண்டு கட்சிகளும் மாறி மாறி ஆட்சி நடத்தியதின் பேரில் மக்களுக்கு ஒரு மாற்றத்தை வேண்டும் என்று விரும்பி வாக்களித்ததற்கு என்பதுதான் உண்மை. மாற்றம் நிச்சயம் நல்ல மாற்றமாக, முன்னேற்றமாக இருக்கும் என்ற நம்பிக்கையை திரு. ஜோசப் விஜய் அவர்கள் வெளிப்படுத்தும் விதமாக அவரது நடவடிக்கைகளை துவக்கி இருக்கிறார் இந்த மாற்றம் நல்ல முன்னேற்றத்தை தரும் என்ற நம்பிக்கையோடு அவரை வாழ்த்துகிறோம்.

அன்புடன்

**எம்.எஸ்.மூர்த்தி**

# நாளைய தீர்ப்பு (1992) முதல் மக்கள் தீர்ப்பு ( 2026)வரை!

## - முதல்வர் விஜய் அவர்களின் அசாத்திய வளர்ச்சி!

திரை உலகில் ஏதேனும் ஒரு துறையில் கொடி கட்டி பறப்பவர்கள் தங்களுடைய வாரிசுகளை அறிமுகப்படுத்துவார்கள். அப்படி அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தாலேயே அவர்கள் வெற்றி பெறுவதில்லை. நடிகர் திலகம் சிவாஜிக்கு பிறகு பிரபு நடிகர் முத்துராமனுக்கு பிறகு கார்த்திக் என்று குறிப்பிட்டு சொல்லக் கூடிய அளவில் சிலர் உயர்ந்து இருக்கிறார்கள். அப்படி இயக்குனராக கொடி கட்டி பறந்த டி. ராஜேந்தர் தனது மகன் சிம்புவை சினிமாவில் அறிமுகப்படுத்தினார். அதைப்போலவே 90களில் புரட்சிகரமான படங்களை இயக்கிய எஸ்.ஏ .சந்திரசேகர் தனது மகன் விஜய் அவர்களை திரையுலகுக்கு அறிமுகப்படுத்தினார். இந்தப் பின்னணியோடு விஜய் அவர்களின் தாயார் ஷோபா பின்னணி பாடகியாகவும், விஜய் அவர்களின் மாமா சுரேந்தர் பின்னணி குரல் கொடுப்பவராகவும் திரை உலகில் ஒரு பின்னணி இருந்தது. அந்த வகையில் 1992 ஆம் ஆண்டு நாளைய தீர்ப்பு என்ற படத்தில் அறிமுகமானவர் விஜய்.

தமிழ்த் திரையுலகில் விஜயின் ஆரம்ப காலம் மிகச் சாதாரணமாகத்தான் துவங்கியது. சிறு வயதில் தன் தந்தையும் இயக்குநருமான எஸ்.ஏ. சந்திரசேகருடன் அவர் இயக்கும் திரைப்படங்களின் ஷூட்டிங்கிற்குச் செல்வார் விஜய். அந்தப் படங்களில் ஏதாவது சிறிய பாத்திரங்கள் இருந்தால் அதில் நடிப்பார்.

பெரும்பாலும் அந்தப் படங்களின் கதாநாகனின் சிறுவயது வேடத்தில் நடித்திருப்பார். அப்படித்தான் வெற்றி, வசந்த ராகம், சட்டம் ஒரு விளையாட்டு ஆகிய விஜயகாந்த் படங்களில் விஜய்தான் சிறு வயது விஜயகாந்த்தாக நடித்தார்.




அந்தக் காலகட்டங்களில் விஜயகாந்த் ஆக்ரோஷமான, அநீதியைத் தட்டிக்கேட்கும் ஹீரோவாக நடித்துக் கொண்டிருந்தார்.

ஆனால், சிறுவயது விஜயகாந்தாக நடித்த விஜய், தனி ஹீரோவாக நடிக்க ஆரம்பித்தபோது அவருக்கு காதலை மையமாகக் கொண்ட படங்களையே தேர்வு செய்தார். இன்னமும் சரியாகச் சொன்னால், பெரும்பாலும் கதாநாயகிகளை கவர்ச்சிகரமாகக் காட்டும், விடலைத்தனமான நாயகனைக் கொண்ட படங்களாகவே இவை அமைந்தன. ரசிகன், தேவா, விஷ்ணு, கோயம்புத்தூர் மாப்ளே போன்ற படங்கள் இதற்கு உதாரணங்கள்.

இப்படியே சென்று கொண்டிருந்த நிலையில்தான் அவருக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது. அந்தத் தருணத்தில்தான்

இயக்குநர் விக்ரமன் ஒரு கதையைச் சொன்னார். பிடித்துப்போய் அதில் நடித்தார் விஜய். படம் சூப்பர் டூப்பர் ஹிட். அந்தப் படம் 'பூவே உனக்காக'. விஜயின் இமேஜை மட்டுமல்ல கேரியரையே அந்தப் படம் மாற்றியமைத்தது.

பூவே உனக்காக படத்தின் வெற்றிக்குப் பிறகு, லவ் டுடே, காதலுக்கு மரியாதை, ஒன்ஸ் மோர், நினைத்தேன் வந்தாய், நிலாவே வா, துள்ளாத மனமும் துள்ளும், என்றென்றும் காதல், கண்ணுக்குள் நிலவு, ப்ரியமானவளே என காதலை மையமாகக் கொண்ட, மென்மையான ஹீரோ பாத்திரங்களிலேயே அவர் தொடர்ந்து நடித்ததால் இளம் பெண்கள் மனதில் இடம் பிடித்தார்.

2003ஆம் ஆண்டில் வெளிவந்த திருமலை இதையெல்லாம் மாற்றியது. அந்த கட்டத்தில் ஒரே மாதிரியான காதல் திரைப்படங்களில் நடித்து அவருக்கும் போரடித்துப் போயிருந்தது. திருமலையின் வெற்றி அவர் செல்ல வேண்டிய திசையைக் காட்டியது போலத் தோன்றியது. அதற்குப் பிறகு, அடுத்தடுத்து ஆக்ஷன் திரைப்படங்கள்தான்.

திருமலைக்குப் பிறகு அவர் நடித்த, கில்லி, மதுர, திருப்பாச்சி, சிவகாசி, ஆதி, போக்கிரி போன்ற ஆக்ஷன் திரைப்படங்கள் அனைத்துமே ஹிட் அல்லது மெகா ஹிட்.

நாளைய தீர்ப்பு'யில் ஒரு சாதாரண இளைஞனாகத் தொடங்கி, இன்று 2026 மக்கள் தீர்ப்பின் மூலம் முதலமைச்சராக உயர்ந்திருப்பது வரை, விஜய்யின் வெற்றி மந்திரம் ஒன்றுதான் - நிதானமும் கடின உழைப்பும்.

விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல் தன் வேலையில் கவனம் செலுத்துவதும், அமைதியாக இருந்து வெற்றிகளால் பதில் சொல்வதும், விஜய்க்கே உரித்தான பாணி. என்பதை திரையில் மூலம் மட்டுமல்ல அரசியலிலும் நிரூபித்திருக்கிறார்.

59 ஆண்டு காலமாக தமிழ்நாட்டை திமுக அதிமுக என்ற இரண்டு கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்து அவர்களுக்கு மாற்றாக மூன்றாவதாக உருவாவதற்கு பல முயற்சித்த நிலையில் அது பலனளிக்காமல்



போய்விட்டது. யாரும் எதிர்பாராத வகையில் தமிழகத்தில் ஒரு மௌனப் புரட்சி நடந்திருக்கிறது. எல்லா ஊடகங்களும், சமூக ஆர்வலர்களும், கருத்துக்கணிப்பாளர்களும் திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக ஏற்கனவே திரைத்துறையில் இருந்து வந்து அந்த முயற்சியில் தோல்வி அடைந்த பல்வேறு நடிகர்களை சுட்டிக்காட்டி அதே நிலைமைதான் விஜய்க்கும் வரும் என்று தான் கணித்தனர். அவரால் நிச்சயமாக எம்ஜிஆர் ஆக முடியாது என்று எல்லா சமூக ஊடகங்களும் எழுதின. நமது மித்ரா டைம்ஸ் மாத இதழில் கூட அப்படித்தான் எழுதினோம். ஆனால் இன்றைக்கு அவருடைய அசாதாரண வளர்ச்சி குறித்து பார்க்கும்போது நம்முடைய கணிப்புகள் தவறானதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

விஜய் மக்கள் இயக்கம் (2009): ஜூலை 2009 ல் தனது ரசிகர் மன்றங்களை ஒன்றிணைத்து 'விஜய் மக்கள் இயக்கம்' என்ற மக்கள் நல அமைப்பை உருவாக்கினார். இதன் மூலம் பல்வேறு சமூக நலப் பணிகள், இலவச கல்வி மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன.

அரசியல் ஆதரவு நிலைப்பாடு: 2011 சட்டமன்றத் தேர்தலில் இந்த இயக்கம் அதிமுக கூட்டணியை வெளிப்படையாக ஆதரித்தது.

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத்

தேர்தலில் கருப்பு சிவப்பு வண்ணத்தில் சைக்கிள் ஓட்டி வந்து திமுகவுக்கு ஆதரவு என்பதைப்போல காட்டியதால் அன்றைக்கு ஆதரவு தெரிவித்தது என்பதை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஒரு பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது.

அறப்பணிகள் மற்றும் நேரடித் தேர்தல் (2021): நீண்ட இடைவெளிக்குப் பிறகு, உள்ளாட்சித் தேர்தல்களில் விஜய் மக்கள் இயக்கம் நேரடியாகப் போட்டியிட்டு கணிசமான இடங்களில் வெற்றி பெற்றது.

அரசியல் கருத்துக்கள்: நீட் தேர்வு ரத்து, கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றம் போன்ற சமூகப் பிரச்சினைகள் குறித்து பகிரங்கமாகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி உதவி மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்கினார்.

தமிழக வெற்றி கழகம் (2024): பிப்ரவரி 2, 2024 அன்று விஜய் தனது அரசியல் கட்சியான 'தமிழக வெற்றி கழகத்தை' அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி, 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அறிவித்தார்.

பெரியார், அம்பேத்கர், காமராஜர் போன்ற தலைவர்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, மதசார்பற்ற சமூக நீதிப் பாதையைத் தனது கட்சியின் சித்தாந்தமாக அறிவித்தார்.

தேசிய மற்றும் மாநிலக் கூட்டணிகளுடன் கூட்டணி வைக்காமல், தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்து தன் பலத்தை நிரூபித்தார்.

ஆனால் அவரது பிரச்சாரத்தில் தெளிவாக குறிப்பிட்டது இரண்டே இரண்டு பேருக்கு தான் போட்டி ஒன்று TVK இன்னொன்று DMK என்பதுதான் கடைசி மனிதன் வரை போய் சேர்ந்தது.

சில இடங்களில் இரண்டே பேருக்கு தான் போட்டி ஒன்று விஜய் இன்னொன்று மு. க. ஸ்டாலின் என்பதை சிறு குழந்தைகள் கூட தெரிந்து கொள்கின்ற அளவுக்கு பிரச்சாரத்தை உருவாக்கினார்.

ஒரு கூட்டத்தில் அவர் பேசும்போது



நீங்கள் எல்லாம் வீட்டை விட்டு வெளியே வந்து தான் அரசியல் பேசுகிறீர்கள் ஆனால் இந்த விஜய் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் இருந்து கொண்டு தான் அரசியல் பேசுகிறேன்.எல்லா வீட்டிலும் ஒரு விஜய் அல்லது ஒரு விஜி இருப்பார்கள். என்று சொன்னார்.

எல்லா கூட்டங்களிலும் நண்பா நண்பிஸ் தோழா தோழி குட்டீஸ் என் நெஞ்சில் குடியிருக்கும்...

என்று பேசி ஐந்து வயது குழந்தை முதல் 40 வயது வரை உள்ள அனைத்து ஆண்கள் பெண்கள் இருவரையும் வசீகரித்தார். குறிப்பாக I.T. துறையில் பணிபுரியும் அத்தனை இளைஞர்களும் விஜய் முதல்வராக வருவதற்கு எல்லா வகையிலும் வெளியே தெரியாமல் பணியாற்றி இருக்கிறார்கள் என்பது தேர்தல் முடிவுக்கு பின்பு தான் தெரியவந்தது. அரசியலில் காலம் காலமாக தேர்தல் வியூகங்களை வகுத்தவர்கள் , தோல்வி என்பது தங்கள் வாழ்க்கையில் பார்க்காதவர்கள் தோற்றுப் போனதுதான் விஜய் பெற்ற மிகப்பெரிய வெற்றியாக கருதப்படுகிறது.

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 10 ஜூன் 2026 டைம்ஸ்- 12

ஆசிரியர்/வெளியீட்டாளர்:
**திரு .எம். எஸ். மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்:
**திருமதி .சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்:
**மணவூர் கி.விடாரண்யம்**
9789837069

இதன் சிறப்பு ஆலோசகர்கள்:
Dr. **ஆ. தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
இயக்குனர் **மு.இரவீந்திரன் (எ) ரவி பார்கவன்**
**எஸ்.ரங்கராஜ்**
**ஆர் .சையது சித்திக்**

நிர்வாக அலுவலர்;
**ஆர். குணசேகரன்**

செய்தி இணை ஆசிரியர்கள்:
**கோவை பி.முத்துராஜ்**
**சென்னை ராயபுரம் வி. குருசாமி**

**திருவள்ளூர் து.சண்முகம் எம் .ஏ**

சட்ட ஆலோசகர்;
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.பி.எல்.

செய்தியாளர்கள்:
**பி.வினோத்**
**பா. விஜயலட்சுமி**
**ராஜேஷ் கணேஷன்**

வடிவமைப்பு:
vidapublications@gmail.com

சந்தா மேலாளர்;
**வி.சுபத்ரா**
**9003107102**

அலுவலகம்:
001 இன்ஞ்சக்கல் பிளாக்
சித்ரா அவென்யூ
9 சூளைமேடு ஹை ரோடு
சென்னை. 94
தொடர்புக்கு:
044-23744661,23743007/08
Mitra times 2015@gmail.com
www.mitraimes.com


# உள்ளே...




தமிழ்நாட்டில் எபோலா பரவுகிறதா? 11



தமிழர்களின் நீர் மேலாண்மை! 13




இந்தியாவில் பிளாஸ்டிக் நோட்டு அறிமுகமாகிறதா! 16



செரிமான பிரச்சனைக்கு தீர்வு! 26



தாயின் முந்தானை தரும் மகிழ்ச்சி! 38



தேன் நெல்லியின் சுவையான குணங்கள்! 44




108 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற விஜய் ஆட்சி அமைக்க ஆளுநர் மாளிகைக்கு நான்கு முறை செல்ல வேண்டியது ஆயிற்று. அதேபோல் முன்னாள் முதல்வர் ஸ்டாலின், வைகோ, சீமான், அன்புமணி, உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களையும் நேரில் சந்தித்தார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுகவின் கூட்டணியில் உள்ள கட்சிகள் அனைத்தும் தன் பக்கம் வந்து சேரும் அளவிற்கு வியூகங்கள் வகுத்தார். அதேபோல அ.தி.மு.கவிலிருந்து பிரிந்து கிடந்த ஒரு குழுவான சி.வி. சண்முகம் தலைமையிலான எம். எல் .ஏ.க்களை சந்தித்தார் . இதனால் கவர்னர் சொன்ன தேதிக்குள் தனது பெரும்பான்மையை நிரூபித்தார். 108 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கொண்ட கட்சிக்கு 144 பேர் ஆதரவு தெரிவித்து அறுதி பெரும்பான்மையோடு ஆட்சி தொடர்வதற்கு வழி செய்து கொண்டார்.

தற்போது தி.மு.க. தன்னுடைய தயவில் தான் தான் இந்த ஆட்சி இருக்கிறது என்று சொன்னதால் ,அதற்கு சவால் விடும் விதமாக அ.தி.மு.கவிலிருந்து எம்எல்ஏக்களை ராஜினாமா செய்து வைத்து தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். இதனால் ஏற்பட போகும் இடைத்தேர்தலில் கூடுதல் இடங்களை பெற்று பெரும்பான்மையை தக்க வைத்துக்கொண்டு திமுக கூட்டணியை வெளியேற்றுவார் என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எது எப்படி ஆயினும் ஒன்றுமே தெரியாதவர் விஜய் என்று கருதிக் கொண்டவர்கள் தற்போது வியந்து தான் அரசியலை நோக்குகிறார்கள்.ஒரு முறை அரசியலில் நிலை நிறுத்தி விட்டால் அதன் பிறகு அதிகாரிகள் வழியில் ஐந்து ஆண்டுகளை கடந்து விடுவார் என்று தான் எதிர்பார்க்க வேண்டி இருக்கிறது. மொத்தத்தில் 1992 நாளைய தீர்ப்பு திரைப்படத்தின் மூலம் அறிமுகமான விஜய் 2026 மக்கள் தீர்ப்பின் மூலம் நீண்ட காலம் அரசியலில் கொடி கட்டி பறப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

**- தம்பி முருகானந்தம்**

# குற்றவாளிகள், அயோக்கியர்கள் ஒன்று சேர்ந்து சமூக வலைதளங்களில் எழுதுகின்றனர்

## நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அருண் பரபரப்பு வாதம்

தன்னுடைய 28 ஆண்டு கால அனுபவத்தில் தவறு செய்ததாக தன் மீது ஒரு புகார் கூட பதிவானதில்லை. குற்றவாளிகள், அயோக்கியர்கள் சேர்ந்து சமூக வலைதளத்தில் எழுதுகின்றனர் என்று லஞ்ச ஒழிப்பு துறை இயக்குனர் அருண் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளித்தார்.

சென்னை கொளத்தூரில் தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷின் மனைவி பூர்ணஜோதிக்கு சொந்தமான நிலத்தில் 234 அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி அதில் 78 குடியிருப்புகளை வழங்கியதில் முறைகேடு செய்ததாக கைது செய்யப்பட்ட கட்டுமான நிறுவன உரிமையாளர் சந்தோஷ் சர்மா குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அமர்வு, குண்டர் தடுப்பு சட்டத்தில் சந்தோஷ் சர்மாவை சிறையிலடைத்து பிறப்பித்த உத்தரவை சென்னை மாநகர காவல்துறையின் அப்போதைய ஆணையரும், மூத்த ஐபிஎஸ் அதிகாரியுமான ஏ.அருணை நேரில் ஆஜராகுமாறு உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்றத்தில் ஆஜரான லஞ்ச ஒழிப்பு துறை இயக்குநர் அருணிடம் நீதிபதிகள், "உங்கள் கருத்துக்களை கூறலாம்" என்றனர். அப்போது ஏடிஜிபி அருண், "மனுதாரரால் 199 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களிடம் போலி கையெழுத்து வாங்கி பலகோடி ரூபாய் மோசடி செய்துள்ளார். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் போராட்டத்தில் இறங்கினர். மனுதாரர் மீது 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. கம்பெனி லா போர்டு முன்பும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். அதனால்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது, என்றார்.

அதற்கு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், குண்டாஸ் ஏன் போட்டீர்கள் என்றார். அதற்கு அருண், "பொதுமக்கள் போராட்டம் நடத்தியதால் பிரச்னை பெரிதாகிவிட்டதால் குண்டாஸ் போட்டோம்" என்று பதிலளித்தார்.

இதையடுத்து நீதிபதிகள், உங்களை பற்றி சமூக வலைத்தளங்களில் ஏராளமான பதிவுகள் வருகிறதே என்று கேட்டனர். அதற்கு அருண், சோசியல் மீடியாவில் என்னைப் பற்றி தவறாக, பொய்யான செய்திகளை பதிவிடுகிறார்கள். காவல்துறையில் அதற்கு பதிலளிக்க



உரிய அமைப்பு எதுவும் இல்லை. கடந்த 28 ஆண்டு கால போலீஸ் பணி அனுபவத்தில் என் மீது ஒரு புகார் கூட இல்லை. தொழில் ரீதியாக, நேர்மையாக நான் பணி செய்யக்கூடியவன். தவறு நடக்கும்போது நடவடிக்கை எடுப்பேன். என்னால் நடவடிக்கைக்கு உள்ளான குற்றவாளிகள், அயோக்கியர்கள் ஒன்று சேர்ந்து எனக்கு எதிராக சோசியல் மீடியாக்களில் தவறான பதிவுகளை எழுதுகிறார்கள். அவர்கள் 100 சதவீதம் பொய் பேசுகிறார்கள். பேச்சு சுதந்திரம் என்பது சமூக வலைதளங்களில் எழுதுகிறவர்களுக்கு மட்டுமே உள்ளது. அதனால் என்ன வேண்டுமானாலும் பொய்யாக எழுதுகிறார்கள். பேச்சு சுதந்திரம் அரசு ஊழியர்களாகிய எங்களுக்கு இல்லை. இதனால் எங்களுக்கு நீதிமன்றம்தான் உறுதுணையாக இருக்க வேண்டும்.

எனது பணி ரெக்கார்டுகளை நீங்கள் வாங்கி பாருங்கள். அந்த ரெக்கார்டுகளில் எனக்கு எதிராக ஒரு எழுத்து இருந்தாலும் என்மீது நடவடிக்கை எடுக்கலாம். என்னால் நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் ரவுடிகளை வைத்து சோசியல் மீடியாக்களில் தவறாக ஆதாரமில்லாமல் விஷம பிரசாரம் செய்கிறார்கள், என்றார். ஒரு சில சமூக ஊடகங்கள் தான் தன் மீது பொய்யான ஆதரமற்ற குற்றச்சாட்டுகளை வெளியிடுவதாக அருண் தெரிவித்தார். இதையடுத்து சந்தோஷ் சர்மாவை குண்டர் சட்டத்தில் அடைத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தவறானது என்பதை தெரிவிப்பதற்காகவே உங்களை ஆஜராக உத்தரவிட்டதாக நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

# தமிழ்நாட்டில் எபோலா பரவுகிறதா?

**ஆ**ப்பிரிக்க நாடுகளில் இருந்து விமானங்கள் மூலம் தமிழ்நாடு வரும் பயணிகளில் நோய்த்தொற்று உறுதிச் செய்யப்படுவோருக்கு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எபோலா வைரஸ் நோய்த்தொற்று பரவல் அச்சுறுத்தலால் தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையங்களுக்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து பயணிகளைத் தனிமைப்படுத்தவும், நோய்த்தொற்று உறுதியாகும் பட்சத்தில் அரசு மருத்துவனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கவும் தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரத்துறை சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. அத்துடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளது.

'Bundibugyo' வகை எபோலா வைரஸ் பரவல் ஆப்பிரிக்க நாடுகளான உகாண்டா, தெற்கு சூடான், காங்கோ ஆகிய நாடுகளில் தீவிரமாகப் பரவி வருகிறது. எபோலோ வைரஸுக்கு 204 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 867 பேர் பாதிப்பு கண்டறியப்பட்டு சிகிச்சையில் உள்ளனர். இந்த சூழலில் உலக சுகாதார அமைப்பு அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது. எபோலோ வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக காங்கோ, உகாண்டா, தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.




அதேபோல், உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தலின் அடிப்படையில் மே 21 ஆம் தேதி அன்று அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் அரசுகளுக்கு மத்திய அரசின் சுகாதாரத்துறைச் செயலாளர் புண்ய சலிலா ஸ்ரீவஸ்தவா கடிதம் எழுதியிருந்தார். அந்த கடிதத்தில், "எபோலா வைரஸ் பரவல் ஆப்பிரிக்கா நாடுகளான உகாண்டா, காங்கோ, தெற்கு சூடான் போன்ற நாடுகளில் அதிகரித்துள்ளது. எனவே, இந்தியர்கள் மேற்கொண்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். எபோலா நோய்த்தொற்றை உலக சுகாதார அமைப்பு அவசர நிலையாக அறிவித்துள்ளது.

இந்த நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள், உள்ளூர் அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வைரஸ் பாதித்த வவ்வால், சிம்பன்சிகள், கொரில்லா உள்ளிட்டவற்றின் வழியாக மனிதர்களுக்கு பரவும். எபோலா வைரஸால் பாதிக்கப்படுபவர்களுக்கு காய்ச்சல், தலைவலி, வாந்தி உள்ளிட்டவை ஏற்படும். இந்த பாதிப்புகள் உடனடியாக குணமாகாது. 2 முதல் 21 நாட்கள் வரை இருக்கும். மேலும் உடலில் சிராய்ப்பு காயங்கள் உருவாகி ரத்தக்கசிவு ஏற்படும். எபோலாவால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டியது அவசியம்; அதுமட்டுமின்றி நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சைப் பெறுவது மிகவும் அவசியம். ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து கப்பல்கள் மற்றும் விமானங்கள் மூலமாக இந்தியா வரும் பயணிகளைத் தனிமைப்படுத்தி பரிசோதனை செய்ய வேண்டும். நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது மருத்துவர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்" என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'எபோலாவால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளான உகாண்டா, காங்கோ, தெற்கு சூடான் ஆகிய நாடுகளில் இருந்து கடல் மற்றும் வான்வழியாக வரும் பயணிகளைக் கண்டறிந்துத் தனிமைப்படுத்தவும், சிகிச்சை அளிக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதேபோல், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய சர்வதேச விமான நிலையங்களில் மேற்கண்ட நாடுகளில் இருந்து வரும் பயணிகளை பரிசோதனை செய்யவும், நோய்த்தொற்று உறுதிச் செய்யப்படும் பட்சத்தில் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது







# நீட் தேர்வு முறையீடு உச்சநீதிமன்றம் தலையீடு!

தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில் தேசிய தேர்வு முகமை(என்டிஏ) இன்னும் பாடம் கற்கவில்லையா என கேள்வி எழுப்பிய உச்ச நீதிமன்றம், பலமுறை அறிவுறுத்தல்கள் விடுத்தும் பாடம் கற்காதது வருத்தமளிப்பதாக தெரிவித்துள்ள நிலையில், உரிய விளக்கம் கேட்டு மத்திய அரசு மற்றும் என்டிஏக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

கடந்த மே 3ஆம் தேதி நாடு முழுவதும் இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு நடைபெற்றது. ஆனால் தேர்வுக்கு முன்பே வினாத்தாள் கசிந்தது தேர்வு நடைபெற்ற பின்னர் தெரியவந்ததால், அந்தத் தேர்வை என்டிஏ ரத்து செய்தது. இதைத்தொடர்ந்து வினாத்தாள் கசிவு குறித்த விசாரணையை சிபிஐயிடம் மத்திய அரசு ஒப்படைத்தது.

இந்த விவகாரம் தொடர்பாக மகாராஷ்டிரம் மாநிலம் நாசிக் மாவட்டத்தைச் சேர்ந்த சுபம் சிபிஐ கைது செய்தது. ஆயுர்வேத மருத்துவப் படிப்பில் சேர்ந்தபோதிலும் படிப்பை முழுமையாக நிறைவு செய்யாத அவர், சட்டவிரோதமாக கசிந்த வினாத்தாளை வாங்கி ரூ.15 லட்சத்துக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படுகிறது.

கல்லூரிகளில் சேர்க்கை பெறுவதற்காகப் பல ஆண்டுகளாகத் தயாராகி வரும் லட்சக்கணக்கான மாணவர்கள், மீண்டும் மீண்டும் நிகழும் முறைகேட்டுச் சம்பவங்களால் பாதிக்கப்படுவதாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தேர்வுகளை நடத்துவதற்குப் பொறுப்பான முகமைகளின் தயார்நிலை மற்றும் விழிப்புணர்வு குறித்து கேள்வி எழுப்பிய நீதிமன்ற அமர்வு; மீண்டும் மீண்டும் நிகழும் இதுபோன்ற சம்பவங்கள், நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளையே சுட்டிக்காட்டுவதாக குறிப்பிட்டது.

பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்தும் நோக்கில் நீதிமன்றம் ஏற்கனவே தலையிட்டுப் பரிந்துரைகளை வழங்கியிருந்தபோதிலும், அதேபோன்ற சர்ச்சைகள் தொடர்ந்து எழுவது, இந்த அமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைப்பதாக கருத்து தெரிவித்துள்ள நீதிமன்ற அமர்வு, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) வினாத்தாள் கசிவு விவகாரத்தில் தேசிய தேர்வு முகமை இன்னும் பாடம் கற்கவில்லையா? என என கேள்வி எழுப்பிய நீதிமன்ற அமர்வு, போட்டித் தேர்வுகளில் மீண்டும் மீண்டும் நிகழும் குளறுபடிகளைத் தடுக்கத் தவறியதற்காக அதிகாரிகளை கடுமையாக விமர்சித்தது.

இந்த நிலையில் வரும் ஜூன் 21ம் தேதி நீட் மறு தேர்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் இந்தத் தகவல் பகிரப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதலோடு ஜூன் 21ம் தேதி நீட் மறு தேர்வு நடத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீட் தேர்வர்களும், பெற்றோர்களும் எந்தவிதமான தகவலுக்கும் அதிகாரப்பூர்வமாக தகவல் பகிரும் ஆதாரங்களை மட்டுமே நம்புமாறும் கேட்டுக் கொண்டுள்ளது. மாணவர்கள் மேலதிக விவரங்களுக்கு email at neet-ug@nta.ac.in என்ற மின்னஞ்சல் முகவரியையும், 01140759000, 011 69227700 ஆகிய தொலைபேசி எண்களையும் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.



# தமிழர்களின் நீர் மேலாண்மை!

இன்று பெய்யும் ஒரு சிறு மழையைக்கூடச் சேமிக்க முடியாமல் வெள்ளத்திலோ அல்லது வறட்சியிலோ சிக்கித் தவிக்கும் நமக்கு, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே *"மழைநீரின் ஒரு துளியையும் வீணாக்கக் கூடாது"* என்ற கொள்கையுடன் வாழ்ந்த சோழர்களின் தொழில்நுட்பம் வியப்பை அளிக்கிறது.

அண்மையில் வைரலான ஒரு காணொளியில் விவரிக்கப்பட்டுள்ள "ஊரணி" (Oorani/Farm Ponds) முறையைப் பற்றிய ஓர் ஆழமான பார்வை இங்கே.

பண்டைய தமிழர்களின் நீர் மேலாண்மையின் முதுகெலும்பாக இருந்தது "சங்கிலித் தொடர் குளங்கள்" (Chain-tank System). ஒரு வயலின் மூலையில் இருக்கும் ஊரணி நிறைந்தவுடன், அதன் உபரி நீர் வீணாகாமல் அடுத்த ஊரணிக்குச் செல்லும் வகையில் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இது நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதுடன், கனமழை காலங்களில் ஊருக்குள் வெள்ளம் புகாமல் தடுத்தது. கணிதத் துல்லியம்: வெறும் குட்டை அல்ல, பொறியியல் அற்புதம். காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கியமான விஷயம் HKCû¡ (Precision). ஊரணிகள் ஏதோ ஒரு இடத்தில் தோண்டப்பட்ட குழிகள் அல்ல.

ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு எவ்வளவு தண்ணீர் தேவை, எவ்வளவு மழை பொழியும் என்பதைக் கணக்கிட்டு அதற்கேற்ப ஊரணிகளின் அளவு தீர்மானிக்கப்பட்டது.

நீரை உள்வாங்கும் வாய்க்கால்கள் (Inlet channels) மற்றும் வெளியேற்றும் பாதைகள் மிகச்சரியான கோணத்தில் அமைக்கப்பட்டிருந்தன. இது நீரின் வேகத்தைக் கட்டுப்படுத்தி மண் அரிப்பைத் தடுத்தது.

சாந்து இல்லாத கட்டுமானம்: காலத்தை வென்ற கற்கள். இந்த நீர்நிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள கற்கள், சிமெண்ட் அல்லது சுண்ணாம்புச் சாந்து (Mortar) இன்றி ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன (Interlocking system).

"வெறும் கற்களைக் கொண்டே 2000 ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் ஒரு கட்டுமானத்தை உருவாக்குவது என்பது சாதாரண விஷயமல்ல. இது அன்றைய தமிழர்களின் கட்டிடக்கலை அறிவுக்குச் சான்று."

கடந்த 50 ஆண்டுகளில், "கூடுதல் விளைநிலம்" என்ற பேராசையில் நாம் நமது முன்னோர்கள் உருவாக்கி வைத்த 90% ஊரணிகளை மண் போட்டு மூடிவிட்டோம். இதன் விளைவாகத்தான் இன்று பருவமழை பொய்க்கும் போது வறட்சியையும், பெய்யும் போது வெள்ளத்தையும் சந்திக்கிறோம்.

கரிகால் சோழன் கட்டிய கல்லணை 2000 ஆண்டுப் பழமையானது. காணொளியில் காட்டப்படும் ஊரணி நுட்பங்கள் பிற்காலச் சோழர்களால் (1000 ஆண்டுகளுக்கு முன்) மேலும் செம்மைப்படுத்தப்பட்டன.

தற்போது அரசு மற்றும் தன்னார்வலர்கள் மூலம் பல இடங்களில் இந்த ஊரணிகள் மீட்கப்பட்டு வருகின்றன (Restoration). இது தாமதமானாலும் சரியான திசையிலான பயணம். சோழர்கள் நமக்காக விட்டுச் சென்றது வெறும் கற்கோவில்களை மட்டுமல்ல, செழிப்பான வாழ்வாதாரத்திற்கான நீர் மேலாண்மை முறையையும்தான். "தண்ணீர் தொட்டிகளை" அழித்துவிட்டுத் தாகத்தைத் தணிக்க முடியாது* என்பதை உணர்ந்து, எஞ்சியிருக்கும் நீர்நிலைகளையாவது காப்பது நம் கடமையாகும்.

– முத்துராஜ், பொள்ளாச்சி



# சுகப்பிரசவம் இனி வரப் பிரசாதமே!

அறிவியல் தொழில்நுட்பம் அதிகம் வளராத அந்த காலகட்டத்தில் குறிப்பாக அறிவியல் சாதனங்கள் அதிகமாக பயன்படுத்தப்படாத நாட்களில் பிரசவம் என்பது சுகப்பிரசவமாக இருந்தது இன்றைக்கு சுகப்பிரசவம் என்பது ஒரு வரப்பிரசாதமாகவே மாறிவிட்டது. இந்தியாவில் இன்னும் சொல்லப் போனால் உலக அளவில் கூட சிசேரியன் மூலம் குழந்தை பெற்றுக் கொள்வது என்பது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது.

இதற்குக் காரணம் மருத்துவத் துறை வல்லுநர்கள் சார்பில் தெரிவிக்கப்படுவது அதிர்ச்சி அளிக்கிறது.

தாமதமான திருமணத்தினால் 30–35 வயதிற்கு மேல் கருத்தரிப்பவர்களுக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் மற்றும் தைராய்டு போன்ற சிக்கல்கள் ஏற்படுவதால் சிசேரியன் அவசியமாகிறது.

நேரத்தை மிச்சப்படுத்துவதற்கும், அதிக கட்டணம் வசூலிப்பதற்கும் சில தனியார் மருத்துவமனைகள் சிசேரியனை முதன்மைப்படுத்துகின்றன.

தனியார் மருத்துவமனைகளில் 54% பிரசவங்கள் சிசேரியன் மூலமே நடக்கின்றன.

கர்ப்பிணிகளிடையே உடற்பயிற்சி மற்றும் முறையான செயல்பாடுகள் குறைந்துபோனதாலும், முறையற்ற உணவுப் பழக்கத்தாலும் சுகப்பிரசவத்திற்கான வாய்ப்புகள் குறைகின்றன. பிரசவத்தின்போது தாய்க்கோ, குழந்தைக்கோ எந்தவித ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதற்காக, மருத்துவர்கள் அறுவை சிகிச்சையை முன்னெடுத்து விடுகின்றனர்.

பிரசவ வலியைத் தாங்க முடியாத பெண்கள், வலியற்ற சுகப்பிரசவ முறைகளைத் (Epidural) தவிர்த்துவிட்டு சுலபமான வழியாக சிசேரியனைத் தேர்ந்தெடுக்கின்றனர் என்று மருத்துவத்துறையில் இருந்து தகவல் சொல்கிறார்கள்.

தமிழ்நாடு மற்றும் கேரளத்தில் 39 சதவிகிதத்துக்கு அதிகமாகவும், ஆந்திரத்தில் 38 சதவிகிதமாகவும், கர்நாடகத்தில் 34 சதவிகிதமாகவும், தெலங்கானாவில் 48 சதவிகிதமாகவும் உள்ளன.

இருப்பினும், பிகார் (13%), ஜார்க்கண்ட் (16%), மத்திய பிரதேசம் (16%) உள்ளிட்ட மாநிலங்களில் அறுவைச் சிகிச்சை மகப்பேறுகள் விகிதம் குறைவாகவே உள்ளது.

10 முதல் 15 சதவிகித அளவிலான அறுவைச் சிகிச்சை மகப்பேறுகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உலக சுகாதார அமைப்பு கூறினாலும், பெரும்பாலான நாடுகளில் இது அதிகமாகவே உள்ளது.அமெரிக்காவில் 32 சதவிகிதம், இங்கிலாந்தில் 45 சதவிகிதம், பிரேஸிலில் 52 சதவிகிதம், லத்தீன் அமெரிக்காவில் 42 சதவிகிதமாகவும் உள்ளது.

இருப்பினும், ஸ்வீடன் (19%) மற்றும் நார்வே (16%) போன்ற நாடுகளில் தேவையற்ற அறுவைச் சிகிச்சைகளைக் குறைப்பதில் கவனம் கொள்வதால், அறுவைச் சிகிச்சை மகப்பேறு விகிதம் குறைவாகவே உள்ளது.



# மேதகு அப்துல் கலாம் விட்டு சென்றது என்ன!

அறிவியல் அறிஞராக இருந்து பின்பு குடியரசுத் தலைவராக இருந்த மேதகு அப்துல் கலாம் அவர்கள் மறைவிற்கு பிறகு அவர் வைத்திருந்த பொருட்களை பார்த்த அவரது நண்பர்கள் ஆச்சரியப்பட்டு போனார்கள். மிகப்பெரிய பதவியில் இருந்தவர் இவ்வளவு எளிமையாக என்பதுதான் அந்த ஆச்சரியத்துக்கு காரணம்.

. அவரது மறைவுக்குப் பிறகு மறுநாள்அவருடைய நெருங்கிய சகாக்கள் அவரது அறையைத் திறக்க வந்தனர். 40 ஆண்டுகள் அரசாங்கத்தில் உயர் பதவிகளில் பணியாற்றி, ரைசினா மலையில் உள்ள கம்பீரமான ராஷ்டிரபதி பவனில் 5 ஆண்டுகள் கழித்த அத்தகைய ஒரு மாபெரும் விஞ்ஞானி, என்ன செல்வத்தை விட்டுச் சென்றிருக்கிறார் என்பதைப் பார்க்க அனைவரும் ஆவலாக இருந்தனர்.

ஆனால், அறை திறக்கப்பட்டபோது, அங்கு அமைதி நிலவியது.

அங்கு லாக்கர் இல்லை. சொகுசு கார் சாவிகள் இல்லை. வெளிநாட்டு வங்கிக் கணக்கு பாஸ்புக் இல்லை.

அறையின் மூலையில் கிடந்த ஒரு சிறிய பெட்டியில், அவர்கள் இதைக் மட்டுமே கண்டனர்:

6 கிழிந்த சட்டைகள் மற்றும் 4 கால்சட்டைகள் (அவற்றை அவரே துவைத்துக் கொள்வார்)

3 பழைய சூட்கள் (அவற்றில் ஒன்று அவர் ஜனாதிபதியானபோது தைக்கப்பட்டது, அது அவருக்கு 5 ஆண்டுகளும் பயன்பட்டது)

1 கைக்கடிகாரம் ஷி நேரந்தவறாதது, ஆனாலும் பகட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்தது

1 பழைய மடிக்கணினி மற்றும் 1 வீணை

மற்றும் எல்லாவற்றிலும் மிகவும் மதிப்புமிக்க உடைமை: 2,500 புத்தகங்கள்

இந்தியாவை ஒரு அணுசக்தி நாடாக மாற்ற உதவிய அந்த மனிதரின் மொத்தச் செல்வம் இதுதான்.

இதைவிடவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

நிஹிஸிகி நிறுவனம், தனது முழு சம்பளத்தையும் ஓய்வூதியத்தையும் நன்கொடையாக அமைதியாகப் பெற்றுக்கொண்டது. பில்லியன் கணக்கான மதிப்புள்ள வரவு செலவுத் திட்டங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடிய கையொப்பத்தைக் கொண்ட அந்த மனிதர், தனக்கென ஒரு அங்குல நிலத்தைக்கூட வாங்கவில்லை.

இன்று, நாம் 2,000 மதிப்புள்ள காலணிகளையும் 5,000 மதிப்புள்ள கண்ணாடிகளையும் அணிந்துகொண்டு நம்மைப் பணக்காரர்களாகக் கருதுகிறோம். ஆனால் அந்த மாபெரும் ஆன்மா, எந்த பிராண்டுகளோ ஆடம்பரமோ இன்றி, ஒட்டுமொத்த உலகின் போற்றுதலையும் வென்றார்.

மரணத்திலும்கூட, டாக்டர் கலாம் நாம் பார்த்துக்கொள்ள ஒரு கண்ணாடியை விட்டுச் சென்றிருக்கிறார் ஷி அது நமக்குக் கற்பிப்பது இதுதான்:

“ஒருவர் தனது அந்தஸ்துக்காக நினைவுகூரப் படுவதில்லை, மாறாக அவரது விழுமியங்களுக்காகவும் தொலைநோக்குப் பார்வைக்காகவும் நினைவுகூரப் படுகிறார்.”

இன்று உங்களுக்குத் தங்குவதற்கு ஒரு கூரையும், உடுத்த ஆடையும் இருந்தால், பொருள் ரீதியாக நீங்கள் ஒரு காலத்தில் ஜனாதிபதியை விட செல்வந்தராக இருக்கலாம். ஆனால், அவரைப் போன்ற இதயம் உங்களிடம் உள்ளதா?

இந்த மகான் மற்றும் அவரது எளிமைக்கு எண்ணற்ற வணக்கங்கள்.




# இந்தியாவில் பிளாஸ்டிக் நோட்டு அறிமுகமாகிறதா!

இந்தியாவில் பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்க இந்திய ரிசர்வ் வங்கி தயாராகி வருகிறது. இது வெற்றி பெற்றால் நம் நாட்டில் பிளாஸ்டிக் நோட்டுகள் மக்களின் புழக்கத்துக்கு வரும். இதுபோன்ற சூழலில், எந்தெந்த நாடுகள் இந்த பிளாஸ்டிக் நோட்டுகளைப் பயன்படுத்துகின்றன,

பிளாஸ்டிக் ரூபாய் நோட்டின் வலிமையின் அளவுகோல் என்பது நோட்டின் தரம் மற்றும் நீடித்து உழைக்கும் தன்மையைக் குறிக்கும். இந்த நோட்டுகள் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்படுத்தப்பட்டாலும், ஆஸ்திரேலியாதான் அவற்றை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு ஆகும். அங்கு தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் நோட்டுகளே மிகவும் வலிமையானவையாகக் கருதப்படுகின்றன.

ஆஸ்திரேலியா 1988ஆம் ஆண்டில் உலகின் முதல் பாலிமர் நோட்டை வெளியிட்டது. இன்று அதன் அனைத்து நோட்டுகளும் முற்றிலும் பிளாஸ்டிக்கை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கின்றன. ஆஸ்திரேலிய ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, 1992 மற்றும் 1996 ஆண்டுகளுக்கு இடையில் ஆஸ்திரேலியா தனது முழு பணத்தாள் வரிசையையும் பாலிமராக மாற்றி உலகின் முதல் முழுமையான பாலிமர் நாணய அமைப்பாக உருவெடுத்தது.

பிளாஸ்டிக் நோட்டுகள் துறையில் கனடாவும் ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறது. கனடா 2011ஆம் ஆண்டில் தனது முழு நோட்டுத் தொடரையும் பாலிமருக்கு மாற்றியது. மேலும் அதன் நோட்டுகள் அதிநவீன பாதுகாப்பு அம்சங்களுக்காகப் புகழ்பெற்றவை. இந்த நோட்டு அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில் கனடா வங்கி இந்த நோட்டுகள் அதிக பாதுகாப்பானதாகவும், நீடித்து உழைக்கக்கூடியதாகவும், கள்ளநோட்டு தயாரிப்பது கடினமானதாகவும் இருக்கும் என்று கூறியது. மேலும், காகித நோட்டுகளை விட 2.5 மடங்கு அதிக காலம் நீடிக்கும் என்றும் கூறியது.

இங்கிலாந்தும் பிளாஸ்டிக் நோட்டுகளை தூய்மையானவை, பாதுகாப்பானவை மற்றும் அதிக நீடித்து உழைக்கக்கூடியவை என்று கூறுகிறது. ஆசியாவில், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவின் பாலிமர் நோட்டுகளும் உறுதியானதாகவும் உயர் தொழில்நுட்பம் கொண்டதாகவும் கருதப்படுகின்றன. ஐரோப்பாவில் பிளாஸ்டிக் நோட்டுகளைப் பெரிய அளவில் ஏற்றுக்கொண்ட முதல் நாடு ருமேனியா ஆகும்.

காகித நோட்டுகளை அச்சிடுவதற்கும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவு தொடர்ந்து அதிகரித்து வருவதால், இந்திய ரிசர்வ் வங்கி பிளாஸ்டிக் அல்லது பாலிமர் நோட்டுகளுக்கு மாறுவது குறித்து பரிசீலித்து வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் 2025 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையின்படி, நோட்டு அச்சிடும் செலவு ரூ. 6,372.8 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய நிதியாண்டில் இருந்த ரூ. 5,101.4 கோடியை விட அதிகமாகும்.

பாலிமர் நோட்டுகள் ஆரம்பத்தில் விலை உயர்ந்தவையாகத் தெரியும். ஆனால் அவற்றின் ஆயுட்காலம் காகித நோட்டுகளை விட பல மடங்கு அதிகமாக இருக்கும். இது நீண்ட கால அடிப்படையில் அடிக்கடி புதிய நோட்டுகளை அச்சிட வேண்டிய தேவையைக் குறைத்து, கணிசமான செலவு சேமிப்பிற்கு வழிவகுக்கும். மேலும், ஏடிஎம்கள் மற்றும் பணத்தைக் கையாளும் அமைப்புகள் இப்போது மிகவும் நவீனமாக இருப்பதால் அவற்றால் பிளாஸ்டிக் நோட்டுகளை எளிதில் அடையாளம் கண்டு செயலாக்கம் செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

# 27 நாட்களில் கட்டுமான திட்ட அனுமதி!

## தமிழக அரசு உத்தரவு!



சென்னை மாநகரில் கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி பெறுவதில் தெளிவுபடுத்த விரைவு படுத்த அரசு உத்தரவுள்ளது.

சென்னையில் விண்ணப்பங்கள் பதிவானதில் இருந்து 27 நாட்களில் கட்டுமான திட்ட அனுமதி வழங்க வேண்டும் என சென்னை மாநகராட்சி ஆணையர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னையில் கட்டுமான திட்ட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களை பதிவு செய்ததில் இருந்து, 7 நாட்களுக்குள் உதவி செயற்பொறியாளர் கள ஆய்வை முடிக்க வேண்டும். கள ஆய்வு முடிந்த இரண்டு நாட்களுக்குள், அதற்கான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். ஆவணங்களை ஆய்வு செய்யும் பணிகளை அடுத்த ஐந்து நாட்களில் முடிக்க வேண்டும்.

மேலும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய, கூடுதல் விபரங்கள், ஆவணங்களை ஆன்லைன் வாயிலாக மட்டும் பெற அடுத்த இரண்டு நாட்களை பயன்படுத்தலாம். விளக்கம் மற்றும் கூடுதல் ஆவணத்தை விண்ணப்பதாரர் அளிக்க, 7 நாட்கள் அவகாசம் கொடுக்கலாம். ஆன்லைன் முறையில் கட்டணம் வசூலிக்க, அடுத்த மூன்று நாட்களை பயன்படுத்தலாம்.. அடுத்து ஒரு நாளில் டிஜிட்டல் முறையில் கட்டட அனுமதி வரைபடத்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

அதன்படி, 27 நாட்களில் கட்டுமான திட்ட அனுமதி அளிக்கப்பட வேண்டும். இதில், அனைத்து ஆவணங்களும் சரியாக தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு, 18 நாட்களில் ஒப்புதல் அளிக்க வேண்டும். இதேபோல், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமான சி.எம்.டி.ஏ., ஒப்புதல் அளித்த திட்டங்களுக்கு, கட்டுமான பணி உரிமத்தை ஏழு நாட்களில் வழங்க வேண்டும். இந்த நடைமுறையை உடனடியாக அமல்படுத்த வேண்டும்" என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

உத்தரவு சரியாக அமல்படுத்தப்பட்டால் மகிழ்ச்சியாக இருக்கும் என்று சென்னைவாசிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# பஜாஜ் நிறுவனம் வழங்கும் புதிய ஸ்கூட்டர்!

பெட்ரோல், டீசல் விலை உயர்ந்து வருவதால் வாகன ஓட்டிகள் அச்சமடைந்துள்ளனர். மேலும், சாமானிய மக்களுடம் சிக்கலை சந்தித்து வருகின்றனர். பெட்ரோல் செலவு அதிகரித்து வருவதால், பணத்தைச் சேமிப்பதற்கான ஒரு வழியாக எலெக்ட்ரிக் வாகனங்களை வாங்கும் எண்ணம் மக்களிடையே வளர்ந்து வருகிறது. நகரப் பயணத்திற்காக மலிவான மற்றும் நம்பகமான ஸ்கூட்டரை பலர் தேடி வருகின்றனர். அவர்களுக்கு பஜாஜ் சேத்தக் C25 (Bajaj Chetak C25) சிறந்த தேர்வாக இருக்கம். இது தினசரி நகரப் பயணத்திற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு எளிமையான மற்றும் வசதியான எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் ஆகும். பஜாஜ் சேத்தக் சி25 மிகவும் மலிவான மாடல்.

இதன் எக்ஸ்ஷோரூம் விலை சுமார் ரூ.91,399 ஆகும். இது சேத்தக் 30 மற்றும் சேத்தக் 35 மாடல்களை விட மலிவானது. குறிப்பாக, தினசரி நகரப் பயணிகள், முதல் முறையாக EV வாங்குபவர்கள், பட்ஜெட்டைக் கருத்தில் கொள்ளும் பயனர்கள் மற்றும் நகரத்தில் குறுகிய முதல் நடுத்தர தூரம் பயணிப்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பஜாஜ் சேத்தக் C25, கிளாசிக் சேத்தக் வடிவமைப்பின் பாரம்பரியத்தைத் தொடர்கிறது. இதில் குதிரை லாட வடிவத்தில் LED DRL மற்றும் முழுமையான LED லைட்டிங் அமைப்பு உள்ளது. இதன் கச்சிதமான வடிவமைப்பு நகரப் போக்குவரத்திற்கு ஏற்றது மற்றும் எளிதாகக் கையாள உதவுகிறது. இது பார்ப்பதற்கு எளிமையாக இருந்தாலும், பிரீமியம் உணர்வைத் தருகிறது. விலை மலிவான மாடலாக இருந்தாலும், இதன் பாடி உறுதியானது மற்றும் நீண்ட கால பயன்பாட்டிற்கு ஏற்றது. இந்த ஸ்கூட்டரில் 2.2 kW ஹப் மவுண்டட் மோட்டார் உள்ளது. 2.5 kWh லித்தியம் அயன் பேட்டரி பேக் பயன்படுத்தப்படுகிறது. இதன் அதிகபட்ச வேகம் சுமார் மணிக்கு 55 கிமீ ஆகும். ஈகோ மற்றும் ஸ்போர்ட் ரைடிங் மோட்கள் உள்ளன. மேலும், நீங்கள் டெக் பேக் எடுத்தால் கூடுதல் அம்சங்கள் கிடைக்கும். இது நகரப் போக்குவரத்தில் மிக நன்றாகச் செயல்படுகிறது. நெடுஞ்சாலைப் பயணத்திற்கு ஏற்றதல்ல. வேகமாக முந்திச் செல்வது சற்று கடினமாக இருக்கலாம். இது மணிக்கு 30 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் மிகவும் சௌகரியமாக இருக்கும்.

பஜாஜ் சேத்தக் சி25ன் கூறப்படும் ரேஞ்ச் சுமார் 95 முதல் 113 கி.மீ. ஆகும். நிஜ வாழ்க்கையில், நகரப் பயணத்தில் இது சுமார் 80 முதல் 95 கி.மீ. வரை செல்லும். 0 முதல் 80 சதவீதம் வரை சார்ஜ் செய்ய சுமார் 2 மணி 25 நிமிடங்கள் ஆகும். இது ஒரு



சாதாரண ஆஃப்போர்டு சார்ஜர் மூலம் இயங்குகிறது. இதை வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ எளிதாக சார்ஜ் செய்யலாம். இது தினசரி பயன்பாட்டிற்கு மிகவும் வசதியானது. இந்த ஸ்கூட்டரில் டெலஸ்கோபிக் முன்பக்க சஸ்பென்ஷன் மற்றும் இரட்டைப் பின்பக்க ஷாக் அப்சார்பர்கள் உள்ளன. 12இன்ச் சக்கரங்கள் நல்ல நிலைத்தன்மையை வழங்குகின்றன. இது நகரச் சாலைகளில் சீராகச் செல்கிறது. வேகத்தடைகளிலும் இது சௌகரியமாக உள்ளது. போக்குவரத்து நெரிசலில் எளிதாகத் திரும்ப முடியும். சஸ்பென்ஷன் சற்று கடினமாக இருப்பது போல் தோன்றினாலும், ஒட்டுமொத்த பயணக் கட்டுப்பாடு நன்றாக உள்ளது.மேலும், இதில் வண்ண லிசிஞி டிஸ்ப்ளே உள்ளது. முழுமையான லிணிஞி லைட்டிங் அமைப்பு வழங்கப்பட்டுள்ளது. டெக்பேக்குடன் ஸ்மார்ட் போன் இணைப்பு வசதி உள்ளது. அழைப்பு எச்சரிக்கைகள், இசைக் கட்டுப்பாடு போன்ற அம்சங்களும் டெக்பேக்கில் வருகின்றன. கைடு மீ ஹோம் ஹெட்லேம்ப் செயல்பாடு, ஹில் ஹோல்ட் அசிஸ்ட் போன்ற பாதுகாப்பு அம்சங்களும் உள்ளன. பயன்பாட்டு வசதியைப் பொறுத்தவரை, பஜாஜ் சேத்தக் C25 ஒரு நல்ல தேர்வாகும். இதில் இருக்கைக்கு அடியில் சுமார் 25 லிட்டர் கொள்ளளவு கொண்ட சேமிப்பு இடம் உள்ளது. ஹெல்மெட்டுகள் மற்றும் சிறிய மளிகைப் பொருட்களை எளிதாக சேமித்து வைக்கலாம். நிமிர்ந்த இருக்கை நிலை, ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்பவர் இருவருக்கும் வசதியாக உள்ளது. எளிதாக ஏறி இறங்கும் வகையில் இதன் ஸ்டெப்த்ரூ வடிவமைப்பு உள்ளது. சுமார் 107 கிலோ எடையும் பயனுள்ளதாக இருக்கிறது.

அப்புறம் என்ன பஜாஜ் ஷோரூம் போய் பாருங்க!

– எஸ். சுரேஷ், திருவொற்றியூர்

# ஒத்திவைக்கப்படும் தீர்ப்புகள் 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும்!

## உச்ச நீதிமன்றம் உத்தரவு!



**நா**டு முழுவதும் உள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களும் தாங்கள் ஒத்திவைக்கும் தீர்ப்புகளை மூன்று மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மால்ய பக்ச்சி ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவில், 'தீர்ப்புகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் வழக்காடுபவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே, அனைத்து உயர் நீதிமன்றங்களும் தீர்ப்புகளை ஒத்திவைத்த மூன்று மாதங்களுக்குள் அவற்றை வெளியிட வேண்டும்.

தனிநபர் சுதந்திரம் தொடர்பான வழக்குகளில் விரைவான தீர்ப்புகள் தேவை. ஜாமின் மனுக்கள் மீதான உத்தரவுகள் அதே நாளில் வெளியிடப்பட வேண்டும். ஒருவேளை ஒத்திவைக்கப்பட்டால் அடுத்த நாளே வெளியிடப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும். ஜாமீன் அல்லது தண்டனை தொடர்பான உத்தரவுகள் வெளியிட்ட உடனேயே சிறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

விசாரணைக் கைதி அல்லது தண்டனை பெற்றவர் அதே நாளில் அல்லது அதிகபட்சமாக அடுத்த நாளுக்குள் விடுவிக்கப்பட வேண்டும். தீர்ப்பின் முக்கிய பகுதி மட்டுமே வெளியிடப்பட்டால் அதற்கான முழுமையான காரணங்களுடன் கூடிய தீர்ப்பு 15 நாட்களுக்குள் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

தீர்ப்பை ஒத்திவைத்த நான்கு மாதங்களுக்குள் அது வெளியிடப் படாவிட்டால் வழக்காடுபவர்கள் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை அணுகி, அந்த வழக்கை வேறொரு அமர்வுக்கு மாற்றக் கோரலாம்.

காரணங்களுடன் கூடிய முழுமையான தீர்ப்பு நீதிமன்றத்தில் வெளியிடப்படும்போது அந்த தீர்ப்பு 24 மணி நேரத்துக்குள் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

இந்த வழிகாட்டுதல்கள் எந்தவொரு குறிப்பிட்ட நீதிபதி மீதோ, உயர் நீதிமன்றத் தீர்ப்பு மீதோ அவதூறு சுமத்தும் நோக்கம் கொண்டவை அல்ல' என்று உச்ச நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோய் தடுக்கும் நலம் தரும் உணவுகள்!



உடல்நலத்துக்கு முக்கிய மானது ஆரோக்கியமான உணவு. இதய நோய்களைத் தடுப்பதற்கும் ஆரோக்கியமான ஊட்டச்சத்து நிறைந்த உணவை எடுத்துக்கொள்வது சிறந்த தீர்வாக இருக்கிறது என்கின்றனர் ஊட்டச்சத்து நிபுணர்கள். பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள் போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வது உங்கள் இதயத்துக்கு நல்லது. பீன்ஸ், கொழுப்பு நீக்கப்பட்ட அல்லது குறைவான கொழுப்பு கொண்ட பால் பொருட்கள், இறைச்சி, மீன் ஆகியவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

உப்பு, சர்க்கரை போன்றவற்றைக் கூடுமானவரை குறைவாக எடுத்துக்கொள்ளுங்கள். நிறை கொழுப்பு, நிறைவுறாக் கொழுப்பு ஆகியவற்றை அளவுடன் எடுத்துக்கொள்வது அல்லது தவிர்த்துவிடுவது நல்லது. ஆனால், அதற்காக முற்றிலும் கொழுப்புச்சத்தைத் தவிர்க்க வேண்டியதில்லை. பாதாம், அக்ரூட், ஆலிவ் எண்ணெய் போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். இதயத்திலுள்ள கெட்ட கொழுப்புச்சத்தைக் குறைக்க இந்த உணவுப்பொருட்கள் உதவுகின்றன.

ஒருநாளில், ஐந்து அல்லது பத்து முறை பழங்கள், காய்கறிகளைக் கொஞ்சமாகச் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. பழங்கள், காய்கறிகளை அதிக அளவில் எடுத்துக்கொள்வது இதய நோய்களைக் கட்டுப்படுத்துவதுடன் ரத்த அழுத்தம், கொழுப்புச்சத்து ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும். சூரை (Tuna), சல்மன் (Salmon) ஆகிய மீன் வகைகளை வாரம் இரண்டு முறை உணவில் சேர்த்துக்கொண்டால் இதய நோய் ஆபத்தைக் குறைக்கலாம். மது அருந்தும் பழக்கம் இருந்தால் அதைக் கட்டுக்குள் வைத்துக்கொள்வது இதயத்துக்கு நல்லது. கட்டுக்கடங்காத மதுப் பழக்கம் இதயத்துக்கு ஆபத்தையே விளைவிக்கும்.



தயிரில் அதிக அளவிலான கார்போஹைட்ரேட் மற்றும் புரதங்கள் உள்ளன. இவை உங்களின் உடலுக்கு புத்துயிர் தந்து சோர்வை விரட்ட உதவுகின்றது. தயிரில் உள்ள புரோபயாடிக்குகள் உங்கள் செரிமான அமைப்பை சீர் செய்கின்றது. எனவே தினந்தோறும் ஒரு கப் தயிர் உட்கொள்வது நம்முடைய ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

சோர்வை விரட்டக் கூடிய மிகவும் சிறந்த பழம் வாழைப்பழம். இப்பழத்தில் உள்ள பொட்டாசியம் சக்கரையை ஆற்றலாக மாற்றுகின்றது.

உடல் சோர்வை எதிர்த்து போராட உதவும் மற்றொரு சிறந்த உணவு பீன்ஸ் ஆகும். இதிலுள்ள சிக்கலான கார்போஹைரேட், புரதங்கள், பொட்டாசியம், பாஸ்பரஸ், இரும்பு, போன்ற கனிமங்கள் நமது உடலுக்குத்தேவையான ஆற்றலை நாள் முழுவதும் வழங்குகின்றன.


க்ரீன் டீயில் உள்ள பாலிஃபினால் மன அழுத்தத்தை குறைத்து உடலுக்கு அதிக ஆற்றலைத் தருகின்றது. க்ரீன் டீ வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து உடல் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றது. க்ரீன் டீயில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து தினவும் அருந்துவது உங்களின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும்.


# பேராசிரியர் சு. ராமசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய 10 நூல்கள் வெளியீடு



21.05.2026 அன்று கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக உள் அரங்கில் பேரா. சு. இராமசுப்பிரமணியன் அவர்களின் பத்து நூல்கள் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

அறிவியல், அரசியல், அழகியல், அறவியல், அகழ்வு, சங்க இலக்கிய வாழ்வியல்,கல்வி, மாற்று மருத்துவம், சமூக ஓர்மை என பலதரப்பட்ட





பொருண்மைகளில் கட்டுரைகள் அடங்கிய படித்து பாதுகாத்து பத்திரப்படுத்த வேண்டிய பத்து நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டு விழாவை நேர்செய்தது வையம் இதழ் மற்றும் பொன்னி பதிப்பகம். இந்த நிகழ்ச்சியில் மன்னார்குடி கண்ணாமூச்சி இதழ் ஆசிரியரும் எழுத்தாளருமான கலைபாரதி அவர்கள் கலந்து கொண்டார். சாதி மாறி சாமி ஆனவன் நூல் குறித்து உரையாற்றினார். தமிழ்நிலத்தின் தனித்துவ ஓவியர் ட்ராஸ்கிமருது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சி. மகேந்திரன், பேராசிரியர் கோச்சடை, அறிவியல் பலகை ஆசிரியர் ஸ்ரீகுமார் சா.தமிழ்ச்செல்வன், இடங்காண்கோட்டை சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



# வெயில் நேரத்தில் ஏ.சி. பயன்பாட்டில் கவனம் தேவை!

கோடை வெயில் கொளுத்தும் சூழலில் பத்திரிகைகளில் அடிக்கடி நாம் பார்க்கின்ற செய்தி ஏசி வெடித்ததாக வருகின்ற செய்தி அதிகமாக பார்க்கிறோம். இதனால் வெயில் காலங்களில் ஏசியை பயன்படுத்தும் போது கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவியல் அறிஞர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இத்தகைய சூழலில் ஏசி பயன்பாடும் அதிகரித்துள்ளது. ஆனால், கடும் வெப்பத்தினால் ஏசி வெடிக்கும் சம்பவங்களை காண முடிகிறது. அதனால் ஏசியை பாதுகாப்பாக கையாள்வதும் மிக முக்கியம்.

ஏசியை முறையாக சர்வீஸ் செய்து வருவது அவசியமான ஒன்றாகும். இதன் மூலம் சிறிய பிரச்னைகளையும் ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரி செய்ய முடியும்.

ஏர் ஃபில்டர் மற்றும் குளிரூட்டும் காயில்களை அடிக்கடி சுத்தம் செய்வதால், இது கம்ப்ரசர் மீது ஏற்படும் அழுத்தத்தை குறைத்து, ஏசி சீராக செயல்பட உதவுகிறது. செம்பு கண்டென்சர் கொண்ட ஏசிகள், அலுமினியம் கண்டென்சர் கொண்ட ஏசிகளை விட சிறந்தவை என நிபுணர்கள் கூறுகின்றனர். அவை விலை அதிகமாக இருந்தாலும் நீண்ட நாட்கள் நீடிக்கும் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் செம்பு, தண்ணீர் அல்லது காற்றில் உள்ள ஈரப்பதத்துடன் எளிதில் வினைபுரியாது. அதனால் அது துருப்பிடிக்காமல் இருக்கும்.மேலும், அதன் Low specific heat தன்மையால், காப்பர் விரைவாக சூடாகாது. அதேபோல குளிர்ச்சியடைய குறைந்த நேரமே எடுத்துக்கொள்ளும். இதனால் அலுமினியம் ஏசிகளை விட காப்பர் ஏசிகளை நிபுணர்கள் அதிகம் பரிந்துரைக்கிறார்கள்.

கோடை காலத்தில் நிறைய வீடுகளில் ஏ.சி மற்றும் ஏர் கூலர்கள் ஓய்வின்றி இயங்கிக்கொண்டிருக்கும். ஊரடங்கு காலத்தில் வீட்டுக்குள்ளேயே முடங்கி இருந்தபோது பழகி விட்டதால் குளிர்சாதன பெட்டிகளின் பயன்பாடு அதிகரிக்க காரணமாக இருக்கிறது. அறைக்குள் நிலவும் வெப்பத்தை விரட்டுவதற்காக நிறைய பேர் குளிர்சாதன பெட்டிகளில் இருந்து அதிக குளிர்ச்சி தன்மையை வரவழைக்கவும் செய்கிறார்கள்.அதனால் அறையும், உடலும் குளிர்ச்சி பெற்றாலும் கூடவே ஆபத்தையும் வரவழைத்து விடும். கொரோனா வைரசுக்கு குளிர்ச்சி சூழல் சாதகமான அம்சமாக கருதப்படுகிறது. அதனால் குளிர்சாதன பெட்டிகளின் வெப்பநிலையை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று மருத்துவ வல்லுனர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

குளிர்சாதனங்களின் இயல்பு வெப்பநிலையை 24 டிகிரி செல்சியல் அளவில் வைத்திருக்க பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதற்கு முன்பு இயல்பு வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் இருந்தது. 20 டிகிரி வெப்பநிலையில் இருந்து 24 டிகிரி வெப்பநிலையை உயர்த்தும்போது ஒவ்வொரு டிகிரிக்கும் சுமார் 6 சதவீதம் வரை மின்சாரம் சேமிக்கப்படும் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஏ.சியை ஒவ்வொரு முறை பயன்படுத்தும்போதும் வெப்பநிலையை ஒரே அளவில்தான் பராமரிக்க வேண்டும். ஏ.சியை அதன் இயல்பு வெப்பநிலையில் தேர்வு செய்தால் 24 சதவீதம் வரை மின்சாரத்தை சேமிக்கவும் முடியும்.


# நானா பட்டேகரின்
# நம்பிக்கை தந்த உயிரோட்டமுள்ள வார்த்தைகள்!

**த**மிழில் பாரதிராஜா இயக்கத்தில் இவர் முதலில் நடித்த படம் : 'பொம்மலாட்டம்'.. சமீபத்தில் 'காலா' திரைப்படத்தில் ரஜினிகாந்தோடு, பா.ரஞ்சித் இயக்கத்தில் நடித்தாரே,அதே நானா படேகர்தான்!

வறட்சியால் மிக பாதிக்கப்பட்டிருக்கும் பகுதி மகாராஷ்ட்ராவின் மராத்வாடா. கூரைகள் இல்லாத வீடுகள். கொடூர வெயிலில், விவசாய நிலங்கள் பாளம் பாளமாக வெடித்திருக்கும். மின்சாரமும் இருக்காது. கிராமத்திற்கு ஒரு விவசாயி தற்கொலை செய்து கொண்டிருப்பார். அரசியல்வாதிகளே எட்டிப் பார்க்கத் தயங்கும் மக்கள் நிறைந்த பகுதி. இங்கு அடிக்கடி ஒரு பிரபலத்தை மட்டும் காண முடியும். இருட்டிலும் கூட செல்போன் வெளிச்சத்தில், அந்தப் பிரபலத்தின் கைகள் செக் விநியோகித்துக் கொண்டிருக்கும். சினிமா உலகில் அவரது பெயர் நானா படேகர், மராத்திய மண்ணில் பிறந்த நடிகர்.

திரையுலகுக்கு வருதற்கு முன் போஸ்டர் ஒட்டியும், சாலைகளில் ஜீப்ரா கோடு வரைவதும்தான் நானாவின் பிழைப்பு. தினச்சம்பளம் 35 ரூபாய். சொற்ப சம்பளத்தில் தாயும் மகனும் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தனர். மராத்தி நாடகங்களில் நடித்து, ஹிந்தி சினிமாவில் புகுந்த பிறகு, வருமானம் கொட்டியது. மூன்றே மாதங்களில் முழு சினிமாவை முடித்து விடும் இன்றைய காலத்தில், 'பிரகார் ' என்ற படத்தில் நடிப்பதற்காக, இந்திய ராணுவத்திடம் 3 ஆண்டுகள் சிறப்புப் பயிற்சி பெற்ற, சற்றே வித்தியாச நடிகர் நானா.

மகாராஷ்ட்ராவில் கடந்த சில ஆண்டுகளாக வரலாறு காணாத வறட்சி. கிராமத்திற்கு ஒரு விவசாயி தற்கொலை. அரசாலும் தடுக்கமுடியவில்லை. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போராடியும் இயலவில்லை. நடிகர்



என்பதையும் தாண்டி, சொந்த மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகள் கொத்து கொத்தாக செத்து மடிவது நானாவை என்னவோ செய்தது. குறிப்பாக மராத்வாடாப் பகுதியில் நாக்பூர், லாத்தூர், ஹிங்கோலி, பிரபானி, நான்டெட் மாவட்டங்களில் விவசாயிகளின் தற்கொலை அதிகம்.

விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க என்ன செய்யலாம் என யோசித்தார் நானா. சில காலம் சினிமாவை ஒதுக்கி வைத்தார். சக நடிகர் மன்கர்டுடன் இணைந்து 'நாம் ' என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கினார். முதல் நாளே 80 லட்ச ரூபாய் நன்கொடை குவிந்தது. நானா படேகர் என்ற அந்த பெயருக்கு மக்களிடம் அத்தனை செல்வாக்கு. 2 வது வாரத்தில் 7 கோடியாக உயர்ந்தது. மொத்தம் 22 கோடி ரூபாய் நன்கொடையாக கிடைத்தது.

நன்கொடை பணம் முழுவதும் விவசாயிகளுக்கு முழுமையாகச் சேர



வேண்டும் என்பது நானாவின் அடுத்த இலக்கு. இந்த விஷயத்தில் நானா படேகர் உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தார். நன்கொடையும் ஏராளமாக வந்துவிட்டது. வேறு ஏதாவது அமைப்பு வழியாக வழங்கிடுவோம் என்று அவர் ஒதுங்கி விடவில்லை. மூன்றாவது அமைப்பின் தலையீட்டை அவர் அனுமதிக்கவில்லை. எந்த அமைப்பையும் அணுகவில்லை. அவரே நேரடியாகக் களத்தில் குதித்தார். மராத்வாடாவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்தினரை வீடு வீடாகச் சென்று நானாவே நேரடியாக சந்தித்தார். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குடும்பத்தினர்க்கும் நேரடியாகச் சென்று நிதியுதவி வழங்கினார். கணவரை இழந்த மனைவிகளைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

மகாராஷ்ட்ராவில், இப்போது 700க்கும் மேற்பட்ட கிராமங்களில், நானா படேகரின் அறக்கட்டளை, பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் கண்டறிந்து உதவி செய்து வருகிறது. விவசாயிகள் தற்கொலை குறைந்திருப்பது நானாவுக்கு சற்று நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது. நிதியுதவி போக, எஞ்சிய பணத்தில் மராத்வாடா பகுதியில் உள்ள ஏரிகள், குளங்களைத் தூர் வாரும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஒரு கோடிக்கு மேல் மரங்கள் நடப்பட்டன. கணவனை இழந்த பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது.

ஒவ்வொரு கிராமத்துக்கும் சுத்தமான குடிநீர் வழங்குவது நானா படேகரின் அடுத்த இலக்கு. அறக்கட்டளை வழியாக சேர்ந்த பணத்தை மட்டுமல்லாது, சினிமாவில் தான் சம்பாதித்த பணத்தில் 90 சதவீதத்தை அறக்கட்டளைக்கே நானா படேகர் வழங்கி விட்டார்.மேலும் விருதுகள் மூலம் கிடைத்தத் தொகையையும் இதில் போட்டார். திரையில் ஆன்டி ஹீரோவாக நடிக்கும் நானாதான், மராத்வாடா மக்களின் நிஜ ஹீரோ.கோடி கோடியாக பணம் சம்பாதித்த போதும், மும்பையில் ஒரு பெட்ரூம் கொண்ட பிளாட்டில்தான் இப்போதும் தாயுடன் வசிக்கிறார் நானா. "சம்பாதித்த பணத்தை அறக்கட்டளைக்கு வழங்கிவிட்டீர்களே'' என்றால் , 'இப்போதுதான் நான் பிறந்ததற்கான அர்த்தத்தை உணர்ந்திருக்கிறேன்'' என 'நச்' பதில் வருகிறது அவரிடமிருந்து. இப்போது மும்பை, தானே, புனே,நாக்பூர், அவுரங்காபாத் என இவர் உதவும் பரப்பு விரிவடைந்திருக்கிறது.

'உங்களுக்கு தற்கொலை எண்ணம் வருமானால் தற்கொலைக்கு முன் என்னை ஒரு முறை நினைத்துக் கொள்ளுங்கள்.!' நானாவின் உதடுகள் அடிக்கடி உதிர்க்கும் வார்த்தை இவை.



# தீக்காயம் ஏற்பட்டால் உடனடியாக செய்ய வேண்டியவை!

தீப்புண் மிகவும் பயங்கராமனது அதே சமயம் வலி மிக்கது. உடனடியாக நாம் தரப்போகின்ற முதலுதவி சிகிச்சை வாழ்நாள் முழுமைக்கும் நினைவுகளில் இருக்கச் செய்திடும். தீப்புண் உண்டான பிறகு தரப்படுகிற சிகிச்சைகளை விட, முதலில் தருகின்ற முதலுதவி தான் மிகவும் முக்கியமானது.

வீட்டில் கவனக்குறைவாக ஏதேனும் சூடான பாத்திரத்தை தொட்டதாலோ அல்லது சூடான பதார்த்தங்கள் கொட்டியதாலோ தீப்புண் உண்டானால் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்று அவசியம் தெரிந்து கொள்ளுங்கள்.

வீட்டில் தீக்காயம் ஏற்பட்டால் உடனடியாக அந்த புண்ணை கவர் செய்திடுங்கள். மற்ற பாக்டீரியா தொற்று அதில் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் . உடனடியாக ப்ளாஸ்டிக் கவர் மூலமாகவோ அல்லது சுத்தமான துணியாலோ அந்த புண்ணை மூடிடுங்கள்.

காயம் அதிகமில்லை லேசான வீக்கம் மட்டும் அல்லது எரிச்சல் மட்டும் இருக்கிறதென்றால் இதனை செய்யலாம். தீப்புண் உண்டான இடத்தை குழாய் நீரில் காட்டிடுங்கள். சுமார் பத்து நிமிடம் வரை குளிர்ந்த நீரினால் காயமேற்ப்பட்ட இடத்தை கழுவிடுங்கள். பின்னர் அந்த இடத்தில் ஐஸ் வைக்கலாம். ஆண்ட்டிபயாட்டிக் க்ரீம் இருந்தால் தடவலாம். கவனம், காயம் ஆழமாக இல்லாதிருந்தால் மட்டுமே இப்படிச் செய்ய வேண்டும்.

அதிக சூட்டினால் கொப்புளங்கள் உண்டாகி அது உடைந்து அதிலிருந்து சீழ் அல்லது தண்ணீர் வந்தால் உடனேயே கழுவிடுங்கள். நன்றாக கழுவிய பின்னர். சுத்தமான துணியைக் கொண்டு மூடிட வேண்டும்

உடலில் தீக்காயம் ஏற்பட்டால் முதலில் சருமத்தை குளிர்ச்சியாக்க வேண்டும். காயத்தை சுத்தமாக கழுவிய பின்னர் குளிர்ந்த நீரில் குளித்திடுங்கள். இது உங்கள் மனநிலையையும் மாற்றிடும்.

சூடான தண்ணீர் கொட்டி விட்டது என்றால் உடனடியாக குளிர்ந்த நீரினால் கழுவி விட்டு அங்கே அதிக கெமிக்கல் இல்லாத டூத் பேஸ்ட் அப்ளை செய்திடலாம்.

சூடான பாத்திரத்தை தொட்டதாலோ அல்லது சூடான பதார்த்தங்கள் கொட்டியதாலோ தீக்காயம் உள்ளாகியிருந்தால் இதனை செய்திடலாம். ரத்தக்காயமில்லாமல் சிவந்திருந்தால் இதனைச் செய்யுங்கள். உருளைக்கிழங்கினை சுத்தமாக கழுவி தோல் நீக்கி காயத்தின் மீது வைக்கலாம். இதற்கு சமைக்காத உருளைக்கிழங்கு தான் பச்சையாக அப்படியே பயன்படுத்த வேண்டும். வேக வைத்தவற்றை பயன்படுத்தக்கூடாது. உருளைக்கிழங்கின் தோலைனைக் கூட இதற்கு பயன்படுத்தலாம்.

பாலில் இருக்கும் சில தாதுக்களால் தீக்காயங்கள் குறைந்திடும். தீக்காயம் ஏற்பபட்டபின் குளிர்ந்த நீரினால் கழுவி பின்னர் காயமேற்ப்பட்ட பகுதியை பாலில் முங்கச் செய்திடலாம். சுமார் பதினைந்து நிமிடம் இப்படியிருந்தால் எரிச்சல் குறைந்திடும்.

தீக்காயம் ஏற்பபட்ட பகுதியில் அதிக எரிச்சல் இருந்தால் இதனை செய்திடுங்கள் . வீட்டில் பயன்படுத்திய டீ பேக் இருந்தால் அதனைக் கூட பயன்படுத்தலாம். சூடாக இருந்தால் குளிர்ந்த நீரில் கழுவி குளிர்ச்சியாக்கிக் கொள்ளுங்கள். பின்னர் அதனை காயமேற்ப்பட்ட இடத்தில் பத்து நிமிடங்கள் ஒத்தடம் கொடுக்கவும். டீயில் இருக்கும் டேனிக் ஆமிலம் காயத்தின் எரிச்சலை கட்டுப்படுத்தும்.

எல்லாரின் வீட்டிலும் இருக்கும். தீக்காயம் ஏற்பபட்டு சருமம் சிவந்திருந்தாலோ அல்லது அதிக வலியோ எரிச்சலோ உண்டானால் காயத்தின் மீது தயிர் தடவலாம். இது சீக்கிரமே காய்ந்திடும். காய்ந்ததும் மீண்டும் இரண்டாவதாக மூன்றாவதாக தயிர் அப்ளை செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# செரிமான பிரச்சனைக்கு தீர்வு!



உணவுகளில் வாசனைப் பொருளாக பயன்படுத்தும் ஏலக்காயில் ஏராளமான சத்துக்கள் அடங்கியுள்ளன.

ஏலக்காயில் உள்ள வாலட்டைல் என்ற எண்ணெய்தான் நறுமணத்தையும் தந்து நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றலையும் தனக்குள் கொண்டுள்ளது.

இதில் உள்ள காரக்குணம் வயிற்றுப் பொருமலைக் குணமாக்கி எளிதில் செரிமானம் ஆகும்படி தூண்டுகிறது.

ஏலக்காயை தேநீர் பாயாசம் முதலியவற்றில் சேர்த்துப் பருகினால் அதில் உள்ள மனம் கவரும் நுண்ணிய பண்பு மன இறுக்கம் படபடப்பு முதலியவற்றை அகற்றி உடனடியாகப் புத்துணர்ச்சி அளிக்கிறது.

எனவே காலையில் தேநீர் அல்லது காபியில் ஏலக்காய் சேர்த்து அருந்துவது நல்லது.



ஈரப்பதம், புரதம், மாவுப்பொருள், நார்ச்சத்து மற்றும் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு போன்ற முக்கிய தாது உப்புக்களும் இதில் உள்ளது.

ஜீரணமாகாதபோது வரும் தலைவலியை ஏலக்காய் சேர்ந்த ஒரு கப் தேநீர் விடுவிக்கும். சில சமயம் வெங்காயம் வெள்ளைப்பூண்டு சேர்த்துக் கொள்பவர்களுக்கு நெஞ் செரிச்சலும் வாய்வுத் தொந்தரவும் இருக்கும்.

இவர்கள் சாப்பாட்டிற்குப் பிறகு ஏலக்காய் மெல்லுவது நல்லது. இரண்டு ஏலக்காயில் உள்ள விதைகளை இடித்து கிராம்புகள் மல்லித்தூள் சேர்த்து தண்ணீர் கலந்து விழுங்கினாலும் உடல் ஜீரணமாகும்.

பாலில் சுடவைத்து இத்துடன் ஒரு தேக்கரண்டித் தேனும் சேர்த்து இருபாலரும் தினமும் அருந்தி வந்தால் இருபாலருக்கும் குறைபாடுகள் குணமாகும். அதே நேரத்தில் பாலில் அதிகமாக ஏலக்காய்த்தூளைச் சேர்த்தால் மலட்டுத்தன்மை ஆண்மைக்குறைவு அதிகரிக்கும்.

எனவே ஒரு சிட்டிகை ஏலக்காய்த் தூளையே பயன்படுத்தினால் போதும். இதே போல ஏலக்காயை சூயிங்கம்மிற்கு பதிலாக மென்றால் வயிற்றுப் பசியை அதிகரித்து நன்கு சாப்பிட வைக்கும்.

குறைந்தபட்சம் தேநீர் பாயசம் முதலியவற்றில் சேர்த்தால் கூட நல்ல சுறுசுறுப்பைப் பெற முடியும்.

அதோடு ஜீரணக்கோளாறு இல்லாமல் ஆரோக்கியமான உடலையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம்.

# போராடி பெற்ற சுதந்திரத்தை பார்க்காமலே மறைந்த வியட்நாம் மாவீரர்!



1890ம் ஆண்டு பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். அவரது இயற்பெயர் சிங்சுங். 'ஹோசிமின்' என்ற பெயருக்கு 'ஒளி தந்தவர்' என்பது பொருள். இருண்டு கிடந்த வியட்நாம் நாட்டுக்கு ஒளி ஏற்றியவர் என்பதால், மக்கள் ஆசையுடன் வைத்த பெயர் ஹோசிமின். தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்ததால் பல பெயர்கள் உண்டு அவருக்கு. கிட்டத் தட்ட ஐம்பது பெயர்கள்!

பிரான்ஸ் நாடு தனக்கு தோதானவர்களை வியட்நாம் அரசின் பதவியில் அமர வைத்து, பொம்மலாட்ட அரசியல் நடத்திக் கொண்டிருந்த காலம். அதை எதிர்த்து புரட்சியாளர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். அரசுக்கு எதிரான தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த கொரில்லா படைக்கு தகவல்களை கொண்டு போகும் ஆபத்தான வேலையை சிறுவனாக இருந்த ஹோசிமின் செய்துகொண்டிருந்தார். நாட்டு விடுதலைக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதலே அதற்குக் காரணம்.

இளைஞனாக வளர்ந்ததும் பிரான்ஸ் நாட்டுக்கு எதிரான பல போராட்டங்களில் அவர் கலந்துகொண்டார். எனினும், அந்த போராட்டங்களுக்கு எந்த பலனும் கிட்டாததால் சோர்வு ஏற்பட்டதுதான் மிச்சம். பின்னர், பிரான்ஸ் நாட்டில் தபால் அலுவலகத்தில் அவருக்கு வேலை கிடைக்க, அங்கு பணியில் சேர்ந்தார்.

அவர் அந்த வேலையில் சேர முக்கியக் காரணம், பிரெஞ்சு புரட்சி எப்படி நடைபெற்றது, அதை எப்படி அவர்கள் சாதித்தார்கள் என்பதை தெரிந்துக் கொள்வதற்காகத்தான். விரும்பியபடியே, அந்த புரட்சி குறித்த தகவல்களை சேகரித்துக் கொண்டபின், 1940 ம் ஆண்டு அவர் வியட்நாமுக்குத் திரும்பினார்.

அந்த காலக்கட்டத்தில், பிரான்சிடமிருந்த வியட்நாம், ஜப்பானின் கைகளுக்குப் போனது. பிரான்ஸ், ஜப்பான் ஆகிய இரண்டு கொள்ளிகளில், ஜப்பான் அவர்களுக்கும் தேவலாம் என்று பட்டது. எனவே, ஜப்பானியர்களுக்கு வியட்நாம்வாசிகள் வரவேற்பும் அளித்தார்களாம்.

யாரிடம் அடிமைப்பட்டிருந்தால் என்ன, அடிமை, அடிமைதானே? எனவே, ஜப்பானியர்களையும் விரட்டியடித்து சுதந்திரத்தை நாம் சுவாசிக்க வேண்டும் என்று ஹோசிமின் முழங்கினார். அவரை நசுக்க ஜப்பான் அரசு முயற்சி செய்ய, வியட்நாமின் அடர்ந்த காடுகளுக்குள் தஞ்சமடைந்தார் ஹோசிமின்.

அந்த காட்டிற்குள் இருந்தபடியே, கொரில்லாப் படையை உருவாக்கி, வாய்ப்புக்காக காத்திருந்தார் அவர். அந்த வாய்ப்பு அவருக்கு சரியாக அமைந்தது. 1945ம் ஆண்டு ஜப்பான் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டிருந்த காலம். அந்த பேரழிவின் அதிர்ச்சிலிருந்து ஜப்பான் சுதாரிக்க முடியாத நிலையில் இருக்க, அந்த வாய்ப்பை பயன்படுத்தி ஜப்பானிடமிருந்து வியட்நாமை அபகரிக்க காய்களை நகர்த்தியது பிரான்ஸ்.

ஆனால், அந்த வாய்ப்பை பிரான்ஸ் நாட்டுக்கு அளிக்காமல், முந்திக்கொண்ட ஹோசிமின், ஜப்பானியர்களை விரட்டியடித்துவிட்டு வியட்நாமை கைப்பற்றினார். அதே வேகத்துடன் வியட்நாமை சுதந்திர நாடாகவும் பிரகடனப்படுத்தினார்.

உடனுக்குடன் தேர்தலையும் நடத்த, ஹோசிமின் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அந்நாட்டின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிபட்ட நாகமாக இருந்த பிரான்ஸ், வியட்நாம் மீது போர் தொடுத்தது.

யுத்தம் ஆரம்பமானது. போர்க்கப்பல்கள், விமானங்கள், பீரங்கிகள் என சகல நவீன ஆயுதங்களுடன் வந்த பிரான்சை, குறைந்த ஆயுதங்களுடன் இருந்த வியட்நாம் எதிர்கொண்டது. எப்படியும் நாம்தான் ஜெயிப்போம் என்ற அகங்காரத்தில் பிரான்ஸ் படைகள், கொஞ்சம் அலட்சியத்துடன் போரிட, காட்டுக்குள்

கடுமையான கொரில்லா போர்முறையைப் பயின்ற வியட்நாம் வீரர்கள் அசுர வேகத்துடன் போரிட்டார்கள். வாழ்வா, சாவா பிரச்னை அவர்களுக்கு. முடிவில் வியட்நாம் வீரர்களே வெற்றி பெற்றார்கள்.

வியட்நாம் வெற்றியை ஈட்டினாலும், தெற்கு வியட்நாம் பிரான்ஸ் நாட்டின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. வடக்குப் பகுதி மட்டும்தான் ஹோசிமின் வசம். நாட்டை முழுமையாக மீட்டே தீருவன் என சபதமிட்டார் ஹோசிமின்.

ஹோசிமின் ஒரு கம்யூனிஸ்ட் என்று முத்திரை குத்தி, அமெரிக்காவிடம் உதவி கேட்டது பிரான்ஸ். கம்யூனிஸ்ட்களை எட்டிக்காயாக பார்க்கும் அமெரிக்கா, பிரான்ஸ் நாட்டுக்கு ஆயுத உதவி செய்தது."யானையை எதிர்க்க வெட்டுக்கிளிகளா?"என்று கிண்டல் செய்யப்பட்டது வியட்நாம்."ஆம்.நாங்கள் வெட்டுக்கிளிகள்தான்.யானையின் குடலைப்பிடுங்கி எறியும் வெட்டுக்கிளிகள்.வெற்றியை தீர்மானிப்பது ஆயுதங்கள் அல்ல; வெகு மக்களே!" என்றார் ஹோசிமின்.

பின்னர், அமெரிக்காவின் உபயத்தால், வியட்நாமில் ஆயுத மழை பொழியத் தொடங்கியது. "விமானங்களையும் பீரங்கிகளையும் எதிர்க்க மூங்கில் குச்சிகள் தவிர வேறு ஏதுமில்லை எங்களிடம். ஆனால் மார்க்சியம், லெனினியம் என்ற வழிகாட்டுதலே நிகழ் காலத்தை மட்டுமல்ல எதிர்காலத்தையும் நமக்கு தரப்போகிறது" என்ற ஹோசிமின், தளராமல் பிரான்ஸ் நாட்டுக்கு தண்ணிக் காட்டினார். வெறுத்துப்போன அமெரிக்கா, 1965ம் ஆண்டு நேரடியாக களமிறங்கியது. இரக்கமே இல்லாமல் வடக்கு வியட்நாம் மேல் குண்டு மழை பொழியத் தொடங்கியது அமெரிக்கா. ஆனால், கொரில்லா படையில் நிபுணத்துவம் பெற்ற வியட்நாம் வீரர்கள் முன்னால் எந்த ஆயுதமும் எடுபடவில்லை. வேறு வழியின்றி வியட்நாம் முன்னால் மண்டியிட்டது அமெரிக்கா. வடக்கு வியட்நாமை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று ஹோசிமினுடன் சமாதானத்துக்கு வந்தது அமெரிக்கா.

அதை ஏற்காத ஹோசிமின், சுதந்திர நாடே எனது லட்சியம் என்பதில் உறுதியாக இருந்தார்.

1968ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி தெற்கு வியட்நாமில் முகாமிட்டிருந்த அமெரிக்கப் படைகள், புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் மூழ்கியிருந்த நேரம்.

சாதாரண மக்கள் போல ஊடுருவியிருந்த ஹோசிமினின் படைகள் திடீரென வெறித்தனமான தாக்குதலில் ஈடுபட்டு, அமெரிக்க தூதரக அலுவலகத்தை கைப்பற்றினார்கள்.



இந்த அவமானத்தையும் மூக்குடைப்பையும் சகிக்க முடியாத அமெரிக்கா, கட்டுப்பாடில்லாத வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. கம்யூனிஸ்ட் என்று சந்தேகம் எழுந்ததால், அப்பாவி பொதுமக்களும் இரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்டார்கள். ஹோசிமினுக்கு ஆதரவாக புத்த பிட்சுகள் போராட்டங்களில் குதித்தார்கள். அவர்களது போராட்டமுறை வேறுவிதமாக இருந்தது. ஒரு சின்ன கதறலோ, சத்தமோ இன்றி புத்த பிட்சுகள் தங்களைத் தாங்களே நடுரோட்டில் எரித்துக் கொண்டார்கள். இதையெல்லாம் பார்த்த அமெரிக்க மக்கள், அமெரிக்க அரசை குறை சொல்ல ஆரம்பித்தார்கள். தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்ததால், வியட்நாமிலிருந்து படைகளை வாபஸ் பெறுவதாக அறிவித்தார் அமெரிக்க அதிபர் நிக்சன்.

அப்படி அறிவித்தாலும், தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து கொண்டேதான் இருந்தது. 1972ம் ஆண்டு மார்ச் மாதம், ஒரு வியட்நாம் கிராமம் மீது நோப்பாம் என்ற குண்டை அமெரிக்கா வீச, அந்த கிராமமே தீப்பற்றி எரிந்தது. அந்த சம்பவத்தில் தன் உறவுகளை இழந்த சிறுமி ஒருத்தி நிர்வாணமாக ஓடி வர, அந்த புகைப்படம் ஊடகங்களில் வெளியாகி, உலகத்தை உலுக்கியது. உலக நாடுகள் அமெரிக்காவை கண்டிக்க, வேறு வழியே இல்லாமல் படைகளை வாபஸ் வாங்கியது அமெரிக்கா.

வட வியட்நாம், தென் வியட்நாமுடன் இணைந்து ஒரே சுதந்திர நாடானது. ஆனால், அந்த கனவுக்காக போராடின ஹோசிமின், சுதந்திர நாடான வியட்நாமை பார்க்க உயிருடன் இல்லை. அதற்கு முன்னதாகவே அவர் மறைந்துவிட்டார். வெற்றிக்கு அருகே அழைத்து வந்த, அந்த தலைவனை மறக்காத வியட்நாம் மக்கள், ஒருங்கிணைந்த வியட்நாம் தலைநகரான சைகோனுக்கு ஹோசிமின் சிட்டி என்று பெயர் வைத்து கவுரவப்படுத்தினார்கள்!

– பாண்டியன் சுந்தரம்

# ‘உளமாற உறுதி கூறுகிறேன்’ என்ற சொற்றொடரின் பின்னணி

**ஜ**னவரி 30 ,1891....

சார்லஸ் பிராட்லா என்கிற கடவுள் மறுப்பாளர், சமூகசீர்திருத்தவாதி, புரட்சியாளர் இறந்து விடுகிறார் பிரிட்டனில். அப்போதெல்லாம் அடக்கம் செய்வதெனில் கிறிஸ்தவ மத சாத்திர சம்பிரதாயங்களோடு பாதிரியார் பைபிள் படிக்க பெட்டியிலிட்டு புதைப்பார்கள். "நான் இறந்தால் சடங்குகள் கூடாது; அப்படியே மண்ணில் புதைத்து விடுங்கள்" என்றிருந்தார் பிராட்லா. அப்படியே புதைக்கப்பட்டார். இதில் மூவாயிரம் பேர் பங்கேற்றனர். (அப்போது இது பெரிய கூட்டம்) இதில் மகாத்மா காந்தி பங்கேற்றார்.அப்போது அவர் அங்கே படித்துக் கொண்டிருந்தார்.

வியப்பு என்னவென்றால் அதே ஜனவரி 30 தான் பின்னர் காந்தி சுட்டுக் கொள்ளப்பட்டார்.


இந்த சார்லஸ் பிராட்லாவை இப்போது நினைவுகூறக் காரணமிருக்கிறது. அதுவரை நாடாளுமன்றத்திற்குப் போட்டி யிட்டு வெற்றி பெறுவோரெல்லாம் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளும் போது கடவுள் பெயராலேயே எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற நடைமுறையே இருந்து வந்தது. இதைப் போராடி மனச்சாட்சிப்படி உறுதி எடுக்கக் காரணமாக இருந்தவரே இந்த பிராட்லா!

சிறு வயதிலேயே நிறைய கேள்வி கேட்கும் வழக்கம் உள்ளவர் பிராட்லா. அப்படி பைபிளில் உள்ள முரண்களை மத குருமார்களிடம் கேள்விகளாகக் கேட்கப்போய் வீட்டை விட்டே தந்தையால் துரத்தி அடிக்கப்பட்டார்.முன்னிலும் அதி தீவிரமாக கடவுள் மறுப்பாளராக ஆகி, பெண் விடுதலை உட்பட நிறைய பேசுபவராக மாறிப்போனார்.

அவர் பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு, நாரத் ஹாம்டன் பகுதியில் 1880இல் போட்டி போட்டார். வெற்றியும் பெற்றார். பிரிட்டன் நாடாளுமன்றம் சென்றார். சபாநாயகர் பதவிப் பிரமாணம் செய்துவைக்க அவரை அழைத்தார். கடவுளின் சாட்சியாக என்று சொல்லிப் பதவி ஏற்குமாறு கூறினார்.ஆனால் அவரோ,"இல்லாத கடவுளை நான் சாட்சிக்கு அழைத்துவர முடியாது" என்று கூறி, கடவுளின் பெயரால் பதவிப்பிரமாணம் செய்துகொள்ள உறுதியாக மறுத்துவிட்டார்.



"உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை; இந்தப் பேரவை நம்புகிறது, இந்த நாட்டின் அரசியல்சாசனம் நம்புகிறது, அதற்குக் கட்டுப்பட்டவர் நீங்கள்; எனவே, 'கடவுள் சாட்சியாக' என்று கூறித்தான் நீங்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும்; அதற்கு நீங்கள் மறுப்பீர் களேயானால் உங்கள் தேர்வு ரத்து செய்யப்படும்" என்றார் சபாநாயகர். அதற்கு சார்லஸ் பிராட்டோ,"இந்த அவையின் ஆயுள்காலம் ஐந்து ஆண்டுகள்தான்; இந்த ஐந்து ஆண்டுகளுக்காக என் ஆயுள்முழுவதும் நான் கட்டிக்காத்துவரும் என்கொள்கைகளை விட்டுவிடமுடியாது; என் தேர்வை நீங்கள் ரத்துசெய்ய விரும்பினால், தாராளமாக செய்துகொள்ளுங்கள்" என்று கூறிவிட்டார்.பிராட்லா பிடிவாதத்தைக் கண்ட அப்போதைய இங்கிலாந்து பிரதமர் வில்லியம் கிளாட்ஸ்டோன் கூட இறங்கி வந்தார், 'சரி. பரவாயில்லை' என்று.முடிவில் வாக்கெடுப்பு



நடத்த முடிவு செய்யப்பட்டது.ஆனால் அவையில் உறுப்பினர்களாக இருந்த மத நம்பிக்கைவாதிகள் கொஞ்சமும் தயவுதாட்சண்யம் இல்லாமல், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது தேர்வை அவருக்கு எதிராக வாக்களித்து ரத்து செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து லண்டன் டவர் சிறையில் அடைத்தும் வைக்கப்பட்டார்.

பிராட்லாவைத் தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருந்தால், அவர் மேல் மக்களுக்கு அனுதாபம் ஏற்பட்டு விடும் என்று சிலர் சொல்ல ஆரம்பித்தார்கள்; இதனால் பின்னர் விடுதலை ஆனார்.

அவருடைய தொகுதிக்கு மீண்டும்26.04.1981 தேர்தல் நடந்தது; மீண்டும் பிராட்லா போட்டியிட்டார்; மீண்டும் வெற்றிபெற்றார்; மீண்டும் அதே பிரச்சனை !பார்த்தார் பிராட்லா.தனது இடத்தில் சபையில் அமர்ந்து கொண்டு எழ மறுத்தார்."எனக்கென்று ஒரு கொள்கை ஒரு நம்பிக்கை இருக்கிறது அதை எந்தக்காரணத்திற்காகவும் என்னால் விட்டுத்தர இயலாது"

என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார் பிராட்லா. விடுவார்களா மத நம்பிக்கை யாளர்கள்? குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியே போட்டதுமல்லாமல்,மீண்டும் அவர்தேர்வை ரத்தும் செய்தார்கள்.

பிராட்லா மக்களிடம் சென்றார். இரண்டு லட்சத்து 41 ஆயிரத்து 990 பேரிடம் சபையில் அனுமதிக்க வேண்டி 1982இல் கையெழுத்து பெற்றுக் கொடுத்தார். சபாநாயகர், உறுப்பினர்கள்,வெளியே இருந்த மதகுருமார்கள் அவரை அனுமதிக்கக் கூடாது என கண்டிப்புக் காட்டினார்கள்.

1984ஆம் ஆண்டு மீண்டும் அவர் தொகுதிக்குத் தேர்தல் நடந்தது; மூன்றாவது முறையும் பிராட்லா போட்டியிட்டார்; இந்த முறை முந்தைய இரண்டுமுறை வாங்கியவாக்குகளைவிட

அதிகவாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார் பிராட்லா!

இம்முறை கெஞ்ச ஆரம்பித்தார்கள்:

"தயவுசெய்து பிடிவாதம் பிடிக்காமல் இந்த அவையின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்கள்; பிராட்லா மிகவும் உறுதியாகச் சொன்னார்: "நான் யார், என் கொள்கைகள் என்ன என்பதைத் தெரிந்துகொண்டுதான் என் தொகுதிமக்கள் என்னை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கிறார்கள்; என் தேர்வை ரத்துசெய்வதன் மூலமாக என்னை தேர்ந்தெடுத்த மக்களை நீங்கள் அவமதிக்கிறீர்கள்;அவர்களுடைய ஜனநாயக உரிமைகளை இழிவு செய்கிறீர்கள்; அவர்களுடைய தன்மானத்திற்கே சவால் விடுகிறீர்கள்"

இம்முறை கடுமைகாட்டிய பிராட்லா, "இதற்குமேல் பேச என்னிடம் எதுவுமில்லை" என்று கூறி அவையில் அமர்ந்துவிட்டார்.இந்தமுறை பிரிட்டன் பாராளுமன்றம் பணிந்தது. "தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், கடவுளின் பெயரால் மட்டுமன்றி மனசாட்சியின் பெயராலும் பதவிஏற்கலாம்" என்று பிரிட்டனின் அரசியல் சட்டமே திருத்தப்பட்டது. இன்று பகுத்தறிவுவாதிகள் மனசாட்சியின் பெயரால் பதவி ஏற்பதற்கு சாரலஸ் பிராட்லாதான் காரணம்!

– அம்ரா பாண்டியன்

# வாழ்வியல் சிந்தனைகள்

– புதுச்சேரி சுகுமார்

**எ**கிறிப் பேசுவதும், எகத்தாளமாகப் பேசுவதும் உங்களை கௌரவமிக்கவர்களாக காட்டாது. இனிமையாகப் பேசுவது தான் உங்களை உயரவாக காட்டும்.

காசை விட வார்த்தைகள் மிக இனி மையானவை. வார்த்தைகளை விட சுகமானவை உலகத்தில் எதுவும் இல்லை.

– பாலகுமாரன்.

அடுத்தவர்களின் விமர்சனம் காக்கை சட்டையில் இட்ட எச்சம் போன்றது. சட்டையையும் மாற்றாமல், சங்கடமும் படாமல் கழுவி துடைத்து விட வேண்டும்.

உங்கள் சொற்கள் எப்படி இருக்கிறதோ, அந்த அளவுக்கு நீங்கள் மதிக்கப்படுவீர்கள். முள்ளின் வலி ஒரு நிமிடம். சொல்லின் வலி பல வருடம். வார்தைகளை கவனமாக பயன்படுத்த வேண்டும்.

நம் நிலை சற்று சரியும் போதுதான் தெரிகிறது பலரின் உண்மை முகங்கள்...

ஆட்களுக்கேற்ப முகமூடியை மாற்றுபவர்களை விட்டு விலகுங்கள்...

அவர்களே சிலநேரங்களில் கழட்டமுடியாமல் அவஸ்தைப்படுவார்கள்; நண்பர்கள் / பகைவர்கள் யாரென்றும், நல்லவர் / கெட்டவர் யாரென்றும், பழகும் போது தெரிவதில்லை...

முகம் எது? முகமூடி எது?

என்று தெரிந்தும் பழகிக்கொண்டுதான் இருக்கிறோம் சில மனிதர்களிடம்; மனசாட்சி ஒரு தடவை உறுத்தினால் அது எச்சரிக்கை. மறு முறை உறுத்தினால் அது தண்டனை. சில மன்னிப்பு கூட ஒரு வகையில் மிக பெரிய தண்டனை தான்.

சில பொய்கள் பொய்யாக இருப்பதே நல்லது. தவறான புரிதல் சரியான பதிலைக் கொடுக்காது.

செல்வந்தன் வீட்டில் சிக்கனமாகவும், ஏழையின் வீட்டில் செழிப்பாகவும் பூக்கிறது சிரிப்பு.

ஏழைகளின் தங்க நகைகள் எளிதில் நிறம் மங்குவதில்லை. அவை அடகு கடையின் நிழலிலேயே அதிகமாக உறங்குவதால். புதிதாகத் தோன்றும் ஒவ்வொரு நெருக்கடியையும் தட்டிக் கழிக்காமல் சந்திப்பதே முதிர்ச்சியின் அறிகுறி.

– பிரிட்ஸ் குன்கெல்

ஒருவர் உங்களைப் புண்படுத்தும்போது, பதிலுக்கு அவர்களைப் புண்படுத்த முயலாமல், அவர்களின் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள நீங்கள் முயற்சிப்பதே முதிர்ச்சியின் உண்மையான அடையாளமாகும்.



முதிர்ச்சி என்பது நாம் பெரிய விஷயங்களைப் பேசத் தொடங்குவது அல்ல. அது நாம் சிறிய விஷயங்களைப் புரிந்துகொள்ளத் தொடங்குவதுதான். கடினமான விஷயம் உடலை வடிவமைப்பது அல்ல; மனதை வடிவமைப்பதே கடினமான விஷயம்.

வாய்ப்பு சூழ்நிலையைச் சார்ந்தது; ஆனால் தேர்வு உங்களது மனப்பான்மையைச் சார்ந்தது.

திறன் என்பது உங்களால் என்ன செய்ய இயலுமோ அதுவே. ஊக்கம் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதைத் தீர்மானிக்கிறது. மனப்பான்மை நீங்கள் அதை எவ்வளவு சிறப்பாகச் செய்வீர்கள் என்பதைத் தீர்மானிக்கிறது.

ஒவ்வொரு செயலும் ஒரு விதை போன்றது. அவற்றை விவேகமாகத் தேர்ந்தெடுங்கள், ஏனெனில் ஒவ்வொன்றும் முட்களையோ, பூக்களையோ முளைக்கவிடும். பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும்.

– ரஸ்கின்.

தலையில் தொப்பி கூலிங் கிளாஸ், என்று முகத்தை முழுவதும் மூடியபடி உள்ளே வந்தார் கபாலிகான். எல்லாவற்றையும் கழட்டி கீழே வைத்துவிட்டு "சரியான வெயிலுங்க"என்றார். அவரை குளிர்ச்சி பெற வைக்க நுங்கு பாயாசம் கொடுத்தோம் வாங்கி சுவைத்தவர், எப்படி இருந்த அ.தி.மு.க இப்படி ஆயிடுச்சு என்று கவலைப்பட்டார்.

**என்ன ஆச்சுங்க?**

90 சதவீத அதிமுகவினர் எங்களிடம் வந்து விடுவார்கள் என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா?

நாம் ஏதும் பதில் பேசாமல் இருப்பதை பார்த்து அவரே தொடர்ந்தார்.

'எனக்குப் பின்னாலும் நூறாண்டுகள் அ.தி.மு.க. இருக்கும் என்று இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு சட்டசபையில் ஜெயலலிதா பேசியது நினைவிருக்கலாம்".

**ஆமாங்க!**

இன்னைக்கு நிலமையே வேற!

**என்ன ஆகும்ங்க!**

எடப்பாடி நிலைமை தான் நமக்கே சங்கடமாக இருக்கிறது. ஒரு பக்கம் பா .ஜ .க. கொடுத்த அழுத்தம், தேர்தலுக்குப் பின் கட்சியிலிருந்து 25 பேர் பிரிந்து தான் சொல்லியும் கேட்காமல் த.வெ.க.வுக்கு நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆதரவு கொடுத்தது இன்னொரு பக்கம் ஒவ்வொருவராக கட்சியிலிருந்து வெளியேறுவது என்று அவரது நிலைமை சங்கடமாக இருக்கிறது.

நதியினில் வெள்ளம், கரையினில் நெருப்பு, இரண்டுக்கும் நடுவே இறைவனின் சிரிப்பு, இதுதான் என் நிலை என்று கண்ணதாசன் பாடல் வரிகளைக் குறிப்பிட்டு சட்டசபையில் ஓ.பி.எஸ் ஒருமுறை பேசியது இப்போது இ.பி.எஸ் அவர்களுக்கு பொருந்துகிறது.

**எப்படி இந்த நிலைமை வந்தது?**

அதிமுகவில் சேர்ந்த ஒரே மாதத்தில் லால்குடி வேட்பாளர்



ஆனார் லீமா ரோஸ் மார்ட்டின்! லாட்டரி அதிபர் மார்ட்டினின் மனைவி, தவெகவின் ஆதவ் அர்ஜுனாவின் மாமியார்

**அவர்தான் காரணமா?**

பிரிந்து போன அதிமுகவினர் மீண்டும் ஒன்று சேர்ந்த போது, தான் அதற்கு காரணம் இல்லை என்று லீமாரோஸ் விளக்கம் தெரிவித்திருக்கிறார்.

**என்ன சொன்னார்?**

லால்குடி சட்டமன்ற உறுப்பினரான லீமா ரோஸ் மார்ட்டின் அதிமுகவில் இணைந்த உடனேயே, கட்சியின் மகளிர் அணி இணைச் செயலாளர் போன்ற முக்கிய பொறுப்புகள் மற்றும் முன்னுரிமை வழங்கப்பட்டது. இது கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் அதிருப்தியையும் புகைச்சலையும் ஏற்படுத்தியது.

கடந்த மே மாதம் நடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, பெரும்பான்மை பலம் கிடைக்காத நிலையில், விஜய் தலைமையிலான தவெக (TVK) கட்சியுடன் எடப்பாடி பழனிசாமி தரப்பு பேச்சுவார்த்தை நடத்துவதாக லீமா ரோஸ் பகிரங்கமாகத் தெரிவித்தார். இது அதிமுகவிற்குள் பெரும் குழப்பத்தையும், மூத்த தலைவர்கள் மத்தியில் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. லீமா ரோஸின் செயல்பாடுகள் மற்றும் அவரது அரசியல் நகர்வுகள் காரணமாகவே அதிமுகவில்





உட்கட்சிப் பூசல்கள் மற்றும் பிளவுகள் ஏற்பட்டதாக ஒரு தரப்பினர் விமர்சித்தனர்.

'என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சிலர் பரப்பிய வதந்திகளே இவை' என்று லீமா ரோஸ் திட்டவட்டமாக மறுத்தார். மேலும், "அதிமுகவை பிரிக்க நான் ஒருபோதும் நினைத்ததில்லை, தலைவர்கள் இணைந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று அவர் அதிகாரப்பூர்வமாக அறிக்கை வெளியிட்டார்.

**அப்ப குழப்பம் தீர்ந்து விட்டது அல்லவா?**

இன்னும் ஒரு சிக்கல் இருக்கே. எல்லோரும் இணைந்த பிறகு சி.வி .சண்முகம், விஜயபாஸ்கர் ஆகிய இருவரும் இணையவில்லை வெளியே இருக்கிறார்கள். அவர்கள் த.வெ.க பக்கம் போவார்கள் என்ற செய்தி அடிபடுகிறது.

**அடடே!**

இதற்கிடையில் கட்சி தாவல் தடை சட்டத்தின் கீழ் அதிமுகவிலிருந்து



ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்த எம்.எல்.ஏக்களின் பதவி தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் குதிரை பேரம் நடப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கவர்னரிடம் மனு கொடுத்திருக்கிறது. அதிமுகவின் தரப்பில் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தனபால். எம். பி. ஆகியோர் மனு கொடுத்திருக்கிறார்கள்.

தினந்தோறும் அ.தி.மு.கவிலிருந்து தொடர்ந்து த.வெ.க. கட்சியில் இணைவது என்பது நடந்து வருகிறது. இதனால் வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் பெரும் குழப்பம் கட்சிக்குள் நடக்கும் என்று தெரிகிறது.

**தி.மு.க. எப்படி இருக்கிறது?**

தங்களால் தான் விஜய் ஆட்சி நடக்கிறது என்று எந்த நேரத்தில் சொன்னார்களோ அதையே சவாலாக எடுத்துக் கொண்டு விஜய் தமக்கு தேவையான பெரும்பான்மைக்குரிய எம்எல்ஏக்களை தன்னுடைய கட்சியில் சேர்த்துக்கொண்டு திமுக கூட்டணியில் ஏற்கனவே இருந்து வந்து சேர்ந்த கட்சிகளை கழட்டி விட்டு விடுவார் என்ற பேச்சு அடிபடுகிறது.

**என்ன ஆகும்?**

ஒன்னும் ஆகாது. ஐந்து வருடத்திற்கு விஜய் ஆட்சி தொடர்ந்து நடத்துற அதிகாரிகள் உதவி செய்வார்கள்.

மித்ரா டைம்ஸ் சார்பில் நாமும் வாழ்த்துவோம் வரட்டுமா என்று சொல்லி வெளியேறினார் கபாலிகான்.

# கொடுக்காப்புளியின் மருத்துவ குணங்கள்!



நம் பால்ய வயதுகளை இனிமையாகவும், ஆரோக்கியமாகவும் மாற்றியதில் எத்தனையோ உணவுப்பொருட்களுக்கு பங்கு உண்டு. அவற்றில் மறக்க முடியாத மகத்துவம் கொண்டது கொடுக்காப்புளி. அதெல்லாம் ஏதோ சிறுபிள்ளைகளின் விளையாட்டுத்தீனி என்று நினைத்துவிடாமல், வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ரசித்து உண்ணுங்கள். இன்னும் சொல்லப் போனால் தேடிப்பிடித்துக் கூட உண்ணுங்கள்"

'கொடுக்காப்புளி சற்று துவர்ப்பாகத்தான் இருக்கும். இதற்கு கோண புளியங்கா, சீனி புளியங்கா என பல பெயர்கள் உண்டு. இதன் தாவரவியல் பெயர் Pithecellbium Dulce. இது Fabaceae என்கிற பட்டாணி இனத்தை சேர்ந்தது). கொடுக்காப்புளி பசிபிக் கடலோரப் பகுதியில் அதிகம் விளைகிறது. இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் பகுதிகளிலும் அதிகம் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் Monkey Pod மற்றும் Manila tamarind என்ற பெயர்களும் உண்டு. கொடுக்காப்புளி மரமானது 10 முதல் 15 மீட்டர் தூரம் வளரும் தன்மை உடையது. இதன் மரம், கிளைகள் ஆங்காங்கே முள், முள்ளாக காணப்படும். இதன் பூக்கள் பச்சைவெள்ளை நிறமாகும்.

கொடுக்கப்புளியை தமிழ்நாட்டில் பிறந்த அனைவரும் சாப்பிடாமல் இருந்திருக்கவே முடியாது என்றுகூட சொல்லலாம். கொடுக்காப்புளி மரமானது வீடு, காடு, கரை, தோட்டம், துரவு, வாய்க்கால், வரப்பு என எல்லா இடங்களிலும் நன்றாக வளரக்கூடியது. வெப்பமண்டல பகுதியில் வளரக்கூடிய ஒரு மரம்தான். கோடை விடுமுறை காலங்கள் நெருங்க நெருங்க கொடுக்காப்புளி மரங்கள் காய்க்கத் தொடங்கும். சிவந்த கொடுக்காப்புளிகளை அணில்கள் அல்லது பறவைகள் தின்றுவிடும். ஓரளவு பழுத்த பழங்கள் மட்டும் தான் நமக்கு கிடைக்கும். கொடுக்காப்புளியை காய்களாக இருக்கும்போதே பார்த்து வைத்து அது பழுக்கும் வரை காத்திருந்து பறித்து உண்டால் நன்றாக இருக்கும்.

இயற்கை மருத்துவத்தில் கொடுக்காப்புளியின் மருத்துவ குணங்கள் நன்கு அறியப்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது. அது செரிமானத்தை மேம்படுத்தவும், கீல்வாதம் மற்றும் கருப்பை நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. வாதநோய் மற்றும் மூட்டு வலிக்கும் மருந்தாக கொடுக்கப்படுகிறது. உடற்சூட்டில் பேதி ஆகாமல் இருக்க கொடுக்காப்புளி தரப்படுகிறது. உடல் எடை குறைய மிக அற்புதமான மருந்தாக கொடுக்காப்புளியை இயற்கை மருத்துவம் பரிந்துரைக்கிறது. குடல் அழற்சி, பெருங்குடல் தொடர்பான எந்த பிரச்னைகளுக்கும் இது நல்ல மருந்தே. கொடுக்காப்புளி புண்களை குணப்படுத்தும். மருத்துவர்கள் இதை அறிமுகப்படுத்திய பிறகு இது விற்பனைப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. சுவையின் அடிப்படையில் கொடுக்காப்புளியின் வகை,காயாக இருந்தால் துவர்க்கும். பழமாக இருந்தால் துவர்ப்போடு இனிக்கும்.

கொடுக்காப்புளியில் அதிகமாக வைட்டமின் சி அதிகம் நிறைந்திருக்கிறது. இது உடலில் உள்ள ஃப்ரீ ரேடிக்கல்ஸ் உருவாகாமல் தவிர்த்து புற்றுநோயிலிருந்து நம்மைக் காக்கும். இது Anti oxidant டாக செயல்படுகிறது. பொட்டாசியம் மற்றும் கால்சியம் எலும்புகளையும், பற்களையும் பலப்படுத்தும். பாஸ்பரஸ் செல்களை புத்துயிர்க்கிறது. இரும்புச்சத்து உடல் சோர்வை நீக்கி புத்துணர்ச்சியைக் கொடுக்கும். மேலும் வைட்டமின் A, வைட்டமின் B1, வைட்டமின் B2, வைட்டமின் B6 போன்றவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. நரம்பு மண்டலத்தை ஊக்கப்படுத்துகிறது. இது தோல், நகம் மற்றும் முடியை வலுவடையச் செய்கிறது. உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்டிரால் (LDL) அளவை குறைக்கிறது. அதனால் உடல் பருமனும் குறைகிறது. HDL எனும் நல்ல கொழுப்பை அதிகரிக்கச் செய்கிறது. வைட்டமின் E இதில் அதிகம் இருப்பதால் என்றும் இளமையான தோற்றத்தையும் கொடுக்காப்புளி அளிக்கும். கொடுக்காப்புளி விதையில் Triterpene Saponins உள்ளதால் மூட்டு வீக்கத்தைக் குறைக்க உதவுகிறது.

இது கிருமிநாசினியாகவும், காச நோயை எதிர்க்கும் ஒரு எளிய மருந்தாகவும் பயன்படுகிறது. கொடுக்காப்புளி மரத்தின் பட்டை பேதி, சீதபேதி, மலச்சிக்கல் மற்றும் காசநோய்க்கு உகந்த மருந்து. கொடுக்காப்புளி இலையின் சாறு அஜீரணக் கோளாறுகள், தொடர் கருச்சிதைவு மற்றும் கல்லீரல், பித்தப்பை பிரச்னைகள், உள் மற்றும் வெளி காயங்களை சீராக்குகிறது. கொடுக்காப்புளி மற்றும் அதனுடைய விதையை சேர்த்து அரைத்து அந்த விழுதை Eye packகாக உபயோகித்து வருவதால் கண் எரிச்சல் மற்றும் வீக்கம், மற்றும் இதர கண் கோளாறுகளிலிருந்தும் விடுபடலாம். கொடுக்காப்புளி பட்டை மற்றும் இலைகளில் உள்ள Glucosidase & Amylase குளுக்கோஸ் வெளியேற்றத்தை குறைத்து நீரிழிவு நோயை கட்டுக்குள் வைக்கிறது. இது காய்ச்சல், மலேரியா மற்றும் மஞ்சள் காமாலையை குணப்படுத்த உதவுகிறது. இளம்பெண்களுக்கு வரக்கூடிய முகப்பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை நீக்குகிறது.

கொடுக்காப்புளி விதையை எடுத்து தோலை நீக்கி, சதைப்பகுதியை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். பின்பு நிழலில் உலர்த்தி பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த பொடியை ½-கிராம் எடுத்து, ½-மில்லித்தூள், ½-சீரகப்பொடி உடன் சேர்த்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் அஜீரண கோளாறு நீங்கும். உப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, மல்லி, கருஞ்சீரகம், ஏலக்காய் மற்றும் கொடுக்காப்புளியின் சதையை எல்லாவற்றையும் சம அளவாக எடுத்து பொடி செய்து, 2 கிராம் அளவுக்கு தேன் (தேன் கிடைக்காவிட்டால் வெல்லம்) சேர்க்க வேண்டும். இது மலச்சிக்கல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. நீரிழிவு, குறைந்த ரத்த அழுத்தம் போன்ற பிரச்னைகளையும் தீர்க்கிறது. இதில் அதிக துவர்ப்புச்சுவை இருப்பதால் ஆண்மைக் குறைபாடு நீங்கும்.

# தோல்வியிலும் வெற்றி!



ஒருத்தர்க்கு ஒருத்தர் உதவியாயிருக்கிறது இயல்பானது. ஆனா அதைக்கூட பலர் செய்யறதில்லை.

அப்படியிருக்கும் போது போட்டி போடுகிற சந்தர்ப்பங்களிலே இது சாத்தியப்படுமா, ஒருத்தரை ஒருத்தர் வீழ்த்திறதிலேதான் குறியா இருப்பாங்க. அப்போ உதவி செய்யறது எப்படி நடக்கும், தோல்வியிலேகூட வெற்றி இருக்கு அப்படின்னு அறிஞர் சொல்றாங்க. அது எப்படி இப்படி எல்லாம் நமக்கு சந்தேகங்கள் வரும். இப்போ ஒரு சம்பவம் சொல்றேன். அதுக்கு அப்புறம் ஒரு முடிவுக்கு வரலாம்.

கிரேக்கப் பகுதியிலே அடிக்கடி மராத்தான் ஓட்டப்பந்தயம் நடக்கும். நீண்ட தூர ஓட்டப் பந்தயத்தைத்தான் மராத்தான் ஓட்டப்பந்தயம்னு சொல்றது. ஓர் ஊர்லே ஓட்டப் பந்தயம் வருஷா வருஷம் நடக்கும். மூணு வருஷமா ஒரே ஓட்டப்பந்தய வீரர் முதலாவது வந்து முதல் பரிசைத் தட்டிக்கிட்டுப் போறார். குறிப்பிட்ட ஒரு ஆளே மூணு வருஷமா இரண்டாவதா வர்றார். மத்தவங்க எல்லாம் அவங்களை விட ரொம்பப் பின்தங்கிப் போயிடறாங்க. நாலாவது வருஷமும் போட்டி ஆரம்பமாகிறது. வழக்கம் போல முதல்லே வர்றவரு முதலாவதாகவே ஓடுறார். இரண்டாவது வர்ற அதே ஆளு இப்பவும் இரண்டாவதாக வர்றார். ஆனா அவருக்கு இந்த வருஷம் எப்படியும் முதல் பரிசை வாங்கிப்புடணும்னு ஒரே வெறி. அதனாலே எவ்வளவு வேகமா ஓட முடியுமோ அவ்வளவு வேகமா ஓடுகிறார். வெற்றிக் கோடு இன்னும் கொஞ்ச தூரத்திலேதான் இருக்கு.

அந்த நேரத்திலே எதிர்பாராத திருப்பம். முதல்லே ஓடினவர் கால் தடுக்கி தலை குப்புற கீழே விழுந்திட்டார். இப்போ இரண்டாவது வர்றவர் இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று வேகமாக ஓடி முதல் பரிசை வாங்கிப்புடணும்னு நெனைச்சு இருக்கணும். ஆனா அவரு அப்படிச் செய்யல. தன்னோட ஓட்டத்தை நிறுத்தினார்; கீழே விழுந்தவரைத் தூக்கிவிட்டார்; கை கால்களை உதறச் சொன்னார்; அவர் காலுக்கு மசாஜ் செய்தார். இப்ப ஓடலாமா என்று கேட்டார். முடியும் என்று சொல்லி அவர் ஓடத் தொடங்கினார். வழக்கம் போல் அவர் முதலிலும் இரண்டாவது ஆள் பின்பும் ஓடிக் கொண்டிருக்காங்க. இப்போ முதலாவது ஓடுகிறவர் நினைக்கிறார்: 'நம்ம கீழே விழுந்ததைப் பயன்படுத்தி இவர் முன்னாடி ஓடி முதல் பரிசை வாங்கி யிருக்கலாமே. அப்படி இல்லாம எனக்கு உதவி செஞ்சாரே அதனாலே இந்த வருஷம் முதல் பரிசை அவர் வாங்கட்டுமே'ன்னு தான் ஓடுற வேகத்தைக் குறைக்கிறார்.

தான் கீழே விழுந்திட்டதாலே முதல் பரிசை வாங்க முடியாமல் போயிடுச்சேங்கிற தாழ்வு மனப்பான்மை அவருக்கு வந்திடக்கூடாதே; அதனாலே இந்த வருஷமும் முதல் பரிசை அவரே வாங்கிட்டுப் போகட்டும்'னு இரண்டாவது ஓடுகிறவர் தன்னோட வேகத்தைக் குறைக்கிறார். இப்படி இரண்டு பேருமே வேகத்தைக் குறைச்சி, கடைசியிலே ரெண்டு பேரும் ஒரே நேரத்திலே வெற்றி எல்லைக்கோட்டைத் தொட்டாங்களாம்.

இன்று நடந்த ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றது அவரோ இவரோ அல்ல; மனித நேயம் வெற்றி பெற்றது. தோல்வியிலே கூட வெற்றி இருக்கு.

# தாலி சரடில் உள்ள ஒன்பது இழைகளும்! அவற்றின் ஒன்பது தத்துவங்களும்

இந்துக்களிடையே மஞ்சள் நிறம் என்றாலே அது புனிதமான நிறம் என்றே கருத்து ஆழமாக பதிந்துள்ளது. திருமணப் பரிசும் மஞ்சள் நிறத்தில் தரப்பட்டது என்று விளக்குகிறார்கள்

தாலம் பனை என்ற பனை ஓலையினால் செய்த ஒன்றையே பண்டைக்காலத்தில் மணமகன் மணமகள் கழுத்தில் கட்டி வந்தபடியால் இதற்குத் தாலி என்ற பெயர் வந்தது. தாலமாகிய பனை ஓலையினால் செய்தது என்பது இதன் பொருள். பனை ஓலைத் தாலி அடிக்கடி பழுதுபட்டதால் நிரந்தரமாக இருக்க உலோகத்தால் ஆன தாலி செய்து பயன்படுத்தினர். பின்னாளில் அதனைப் பொன்னால் செய்து பொற்றாலி ஆக்கினர்.

பதினோராம் நூற்றாண்டில்தான் திருமணச் சின்னம் என்ற ரீதியில் தாலி என்ற பெயர் உபயோகப்படுத்தப் பட்டது என்கிறது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டிருக்கும் "தமிழர் திருமணம்" என்கிற புத்தகம்.

மாங்கல்யச் சரடானது ஒன்பது இழைகளைக் கொண்டது. ஒவ்வொரு இழைகளும் ஒவ்வொரு நற்குணங்களைக் குறிக்கிறது.

தெய்வீகக் குணம், தூய்மைக் குணம், மேன்மை - தொண்டு, தன்னடக்கம், ஆற்றல், விவேகம், உண்மை, உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளுதல், மேன்மை.

இந்த ஒன்பது குணங்களும் ஒரு பெண்ணிடம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒன்பது இழைகள் கொண்ட திரு மாங்கல்யச்சரடு (தாலி சரடு) அணிவிக்கப்படுகிறது.




# மித்ரா டைம்ஸ்

## சந்தா தொகை அனுப்பி விட்டீர்களா!

சந்தா செலுத்துபவர்களுக்கு சிறப்பு சலுகையாக...

மித்ரா டைம்ஸ் இதழுடன்...

**பெண் உலகம், மித்ரா பிக்சர்ஸ் நியூஸ்**

ஆகிய இரண்டு இணைப்பு இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த சிறப்பு சலுகை

**3 ஆண்டு சந்தா : 900/-**

**6 ஆண்டு : சந்தா: 1500/-**

தொடர்புக்கு: சந்தா மேலாளர் 9003107102

# தமிழ் வளர்ப்பில் நமது பங்கு!

## – மூதறிஞர் இறையரசன்!



தமிழ்நாடு முழுக்க தமிழ் வாழவும்வளரவும், குறிப்பிட்ட கட்சி ஆட்சி செய்யவில்லை என்று ஆண்டவர்களைக் குறை சொல்வதை விடுத்து நாம் செய்ய வேண்டியன என்ன?

குழந்தைகளிடம் வீட்டில் தமிழில் மட்டும் பேசுங்கள். ஆங்கிலம் பள்ளியில் ஒரு மொழியாகப் படிக்கட்டும்.

ஏன்: ஒரு மொழி அழிய முதல் காரணம் வீட்டில் பேசாமல் விடுவது தான். தாய்ப்பால் மாதிரி தாய்மொழி.

அரசு வேலை, தனியார் வேலையில் தமிழ்வழி படித்தவர்களுக்கு முன்னுரிமை.

பொறியியல், மருத்துவம் தமிழில் கொண்டு வர வேண்டும்.

சிறப்பு: ஏற்கனவே IIT-யில் முதலாம் ஆண்டு தமிழில் படிக்கலாம். இதை எல்லா கல்லூரிக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

என்ன செய்யலாம்: மொபைல், கம்ப்யூட்டரில் தமிழ் விசைப்பலகை (கீபோர்டு ) பயன்படுத்துங்க. AI, ChatGPT-யிடம் தமிழில் கேள்வி கேளுங்க.

நாம் தமிழில் தேடினால் தான் கூகுள், மெட்டா போன்ற நிறுவனங்கள் தமிழுக்கு இடம் தரும்.

விரைவில் எல்லாமே செயற்கை நுண்ணறிவியல் AI மயம். தமிழ் இல்லைனா பின்தங்கிடுவோம்.

கடை பெயர், வீட்டு முகவரி, திருமண அழைப்பிழ் சடங்குகள் தமிழில் இருக்கட்டும். அரசு அலுவலகங்களில் தமிழில் மனு கொடுங்க.

தமிழ்நாடு அரசு அலுவல் மொழி சட்டம் 1956 உள்ளது. இலக்கியம் + ஊடகம் தமிழில் படிங்க, பாருங்க, பகிருங்க. என்ன செய்யலாம்: தமிழ் நாளிதழ், மாதம் 1 தமிழ்ப் புத்தகம் வாங்குங்கள். தமிழ் பாடல், தமிழ் தொகா. தரமான தமிழ்ப்படங்கள், வெப் சீரிஸ் ஆதரியுங்க.

பார்வையாளர் இருந்தால் தான் படைப்பாளி உருவாவான்.

என்ன செய்யலாம்: கோயில்களில் அருச்சனை தமிழில் செய்ய கேளுங்க. ஊர் பெயர்களை தமிழிலேயே அழையுங்க. "Madras" இல்ல "சென்னை". "Tanjore" இல்ல "தஞ்சாவூர்".

பழைய ஊர்ப் பெயர்களை மீட்டால் வரலாறு பேசும். குழந்தைகளுக்கு சிலப்பதிகாரம் (படக்) கதையாகச் சொல்ல, காணச் செய்யுங்கள். கல்லணை, கடிகை, உத்திரமேரூர் கல்வெட்டு பற்றி பெருமையா சொல்லுங்க.

பெருமை தெரிந்தால் தான் பிடிப்பு வரும். கட்டாயப்படுத்தினால் வெறுப்பு வரும்.

மன்னர்கள் ஏரி வெட்டினார்கள், சங்கம் வைத்தார்கள். இன்று நாம் மின்னியல் "டிஜிட்டல் ஏரி" வெட்டணும். அதாவது தமிழ் விக்கிபீடியா, தமிழ் செயலிகள் AI முதலியன உருவாக்கணும்.

மொழியை காப்பது அரசின் வேலை மட்டும் இல்லை. ஒவ்வொரு தமிழனின் கடமை.



# தாயின் முந்தானை தரும் மகிழ்ச்சி!

ஒரு தாயின் முந்தானையை 'ஜீன்ஸி'ல் எங்கே காண்பீர்கள்?

பள்ளியில், ஆசிரியர் மாணவர்களை, “தாயின் முந்தானை” குறித்து ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். ஒரு மாணவன் மிகவும் நெகிழ்ச்சியான ஒன்றை எழுதியிருந்தான், அது உங்கள் இதயத்தை உணர்ச்சிகளால் நிரப்பக்கூடியது.

மதிப்பிற்குரிய ஆசிரியரே, ஒரு தாயின் முந்தானை என்பது வெறும் ஒரு துணி மட்டுமல்ல; அது ஒரு தாயின் கண்ணியமும் கருணையும் ஆகும்.

அடுப்பிலிருந்து சூடான பாத்திரங்களை எடுக்க தாயின் முந்தானை பயன்படுத்தப்பட்டது. அது தன் குழந்தைகளின் வியர்வையையும் கண்ணீரையும் துடைத்தது, அழுக்கான முகங்களையும், காதுகளையும், சின்னஞ்சிறு கைகளையும் சுத்தம் செய்தது. சாப்பிட்ட பிறகு, தாயின் முந்தானையால் முகத்தைத் துடைப்பதில் ஒரு தனி ஆறுதல் இருந்தது. எங்கள்கண்களில் ஏதாவது விழுந்தால், அம்மா முந்தானையைச் சுருட்டி, தன் மூச்சால் அதை மெதுவாகச் சூடாக்கி, கண்ணின் மீது வைப்பார் ஊடி எப்படியோ, வலி உடனடியாக மறைந்துவிடும். தாயின் மடியில் உறங்கும் குழந்தைகளுக்கு, அவளது மடி மென்மையான படுக்கையாகவும், அவளது முந்தானை ஆறுதலான போர்வையாகவும் ஆனது.

அந்நியர் ஒருவர் வீட்டிற்குள் நுழையும்போதெல்லாம், குழந்தை பாதுகாப்பிற்காகத் தாயின் முந்தானைக்குப் பின்னால் ஒளிந்துகொள்ளும். குழந்தை கூச்சப்படும்போதெல்லாம், தாயின் முந்தானையால் தன் முகத்தை மூடிக்கொள்ளும். குழந்தை வெளியே காலடி எடுத்து வைக்கும்போது, அந்த முந்தானையைப் பிடித்துக்கொள்ளும், அதுவே அதன் வழிகாட்டியாகவும் பாதுகாப்பாகவும் ஆனது. குழந்தை தாயின் முந்தானையைப் பிடித்துக்கொண்டிருக்கும் வரை, இந்த முழு உலகமும் பாதுகாப்பாகத் தன் கைக்கு எட்டும் தூரத்தில் இருப்பது போன்ற உணர்வை அது பெறும்.

குளிர்காலத்தில், குளிரிலிருந்து குழந்தையைப் பாதுகாக்க, தாய் தன் முந்தானையால் எல்லாப் பக்கங்களிலிருந்தும் போர்த்துவாள். மேலும், கனமழையின்போது, அதே முந்தானை குழந்தையின் முகத்தை மறைக்கும் ஒரு குடையாக மாறும்.

தாயின் முந்தானை, கைகளைத் துடைக்க ஒரு துண்டு போலவும் பயன்படுத்தப்பட்டது. மரங்களின் அடியிலிருந்து, உதிர்ந்த பூக்களையும் பழங்களையும் அது சுமந்து சென்றது. சில சமயங்களில், தானியங்கள், காணிக்கைகள் அல்லது பிரசாதம் அதில் சேகரிக்கப்பட்டன.


வீட்டுப் பொருட்களைத் தூசி தட்டிச் சுத்தம் செய்யவும் அது பயன்படுத்தப்பட்டது.

ஏதாவது தொலைந்து போனால், அது விரைவில் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில், அம்மா, தன் முந்தானையில் ஒரு முடிச்சுப் போடுவார் ஊடி எப்படியோ, அது பெரும்பாலும் கிடைத்துவிடும். அம்மாவின் முந்தானையில் உள்ள அந்த முடிச்சு, நகரும் வங்கி அல்லது லாக்கர் போலவும் இருந்தது; அதிர்ஷ்டம் குழந்தைக்குச் சாதகமாக இருந்தால், அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சில நாணயங்களும் மாயமாகத் தோன்றும். அம்மாவின் முந்தானை வெறும் துணி மட்டுமல்ல ஊடி அது ஒரு மாய உணர்வு, ஒரு மன எழுச்சி, ஒரு புகலிடம், மற்றும் அன்பின் உலகம்.

இன்றைய தலைமுறை அதன் அரவணைப்பையும் அர்த்தத்தையும் ஒருபோதும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் போகலாம். இப்போது, அம்மாக்கள், 'ஜீன்ஸ்' போன்ற பலவகை உடைகளை அணியும்போது... அந்த "முந்தானை" எங்கிருந்து வரும்?

– த.மு. ரவிச்சந்திரன்

# உறவுகளுடன் கழிக்கும் பொழுதுகள் என்றும் இனிமை!



என்ன சார்.?.

பத்து நாள் லீவ் போல.. ஏதாவது சம்மர் டூரா.?. கேட்டபடியே வந்தார் அவர்.

இல்லைங்க. பசங்களுக்கு லீவு விட்டாச்சு. கொண்டுபோய் ஒரு மாசம் எங்க அப்பா, அம்மாகிட்டே விட்டுட்டு வரலாம்னு இருக்கேன். அப்படியே நானும் பத்துநாள் தங்கிட்டு வரலாம்னு. ஊருக்குப் போய் நாளாச்சே.?.. பதிலளித்தார் இவர்.

அட என்ன சார் நீங்க.? உங்க ஊரே ஒரு கிராமம். வசதிகள் குறைவு. சிட்டி லைப்லேயே வாழ்ந்த பசங்க உங்களுக்கு. அவங்களுக்கு அங்க செட்டாகுமா.? போரடிக்காதா.? அப்பா, அம்மாவை இங்க வரவச்சிட்டு, ஜாலியா இருக்கறதை விட்டுட்டு.. என்றார் அவர்.

வசதியெல்லாம் மனசைப் பொறுத்ததுதாங்க. மனசு சந்தோஸமா இருந்தா போதுங்க. அதுவுமில்லாம, ஊர்ல சொந்தக்காரங்க எல்லோருக்கும் நம்ம பசங்களையும், நம்ம பசங்களுக்கு அவங்களையும் முழுசா தெரிய வேணாமா.? எல்லாரையுமா இங்க வரவழைக்க முடியும்.?.. கேட்டார் இவர்.

சார்.. பையன் பத்தாவது எழுதியிருக்கான். அடுத்து கோச்சிங் கிளாஸ், கான்ஸன்ட்ரேஷன் கிளாஸ், யோகா கிளாஸ்னு ஏகப்பட்ட விஷயமிருக்கு. அதையெல்லாம் விட்டுட்டு, ஊருக்குப் போய் பசங்களோட எதிர்காலத்தை வீணாக்குறீங்க சார்.. என்றார் அவர்.

நீங்க சொன்ன அத்தனை கிளாசும் கூட்டுக் குடும்பத்துலேயே இருந்ததுங்க. அதை விட்டுட்டு பொழைக்க தனியா வந்ததிலதான், இப்போ எல்லாத்துக்கும் கோச்சிங் கிளாஸ் தேட வேண்டியிருக்கு.. என்றார் இவர்.

காம்பெடிஷன் அதிகம் சார். இப்போலேர்ந்தே எல்லாத்துக்கும் பசங்களை தயார் பண்ணணும். அதுக்குத்தான் சொல்றேன்.. என்றார் அவர்.

தன்னம்பிக்கையும், தைரியமும் தரதே நம்ம உறவுகள்தான் சார். அதை இழந்துட்டு, எதைக் கத்துக்கிட்டும் பிரயோஜனமே இல்லை சார்.. என்றார் இவர்.

புரியலை சார்.. என்றார் அவர்.

பிரச்சனையே அதான். இங்கே நிறைய பேர் தன் பசங்க எல்லாத்தையும் கத்துக்கணும்னு நெனக்கறாங்களே தவிர, வாழக் கத்துக் குடுக்கறதே இல்லை.

சொந்தக்காரங்க ஒவ்வொருத்தரும் ஒரு மாதிரி சார். அத்தனை பேரையும்

பசங்களுக்கு எப்படி சமாளிக்கறது, எப்படி பழகறதுன்னு தெரிஞ்சாதான், நாளைக்கு வெளி உலகத்துல எப்படி எல்லோர்கிட்டேயும் பழகறதுன்னு தெரியும். அதுவுமில்லாம, நமக்காக இத்தனை பேர் இருக்காங்க அப்படின்ற தைரியமும் வரும். நாம தப்பு செஞ்சா இத்தனை பேர் கேட்பாங்கன்ற பயமும் இருக்கும்.

இதையெல்லாம் தாண்டி, வருஷத்துல இந்த ஒரு மாசத்தை எதிர்பார்த்து வருஷம் பூரா காத்திட்டிருக்கற வயசானவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. பணம் சம்பாரிக்க, படிக்க, பிழைக்கன்னு ஏதாவது ஒரு காரணத்தால பிரிஞ்சு கிடக்கிற குடும்பம், இந்த ஒரு மாசம் இணைஞ்சிருக்கறதால அவங்க அடையற சந்தோஷத்தை, நீ என்ன விலை கொடுத்து, எதை வாங்கித் தந்தாலும் கிடைக்காது. இந்த வயசுல எங்க அப்பாவுக்கு நான் அடங்கி நடக்கறதையும், எங்க அம்மா மடில நான் படுத்து தூங்கறதையும் எம் பிள்ளை பார்த்தாலே போதும். பாசம்னா என்னன்னு புரிஞ்சுப்பான். என்னை கொண்டாட ஆரம்பிச்சுடுவான். இதையெல்லாம் கோச்சிங் கிளாஸ் சொல்லிக் குடுக்காது.

பசங்களுக்கு எல்லாம் தெரியணும்கறதை விட, நல்லது தெரியணும்கறதுதான் முக்கியம்.

எம் பசங்க நிறைய சம்பாரிக்கறான்.. பெரிய அதிகாரி.. அப்படின்றது எனக்குப் பெருமையில்லை. எம் பையன் என்னை நல்லாப் பார்த்துக்கறான்னு முழுமனசோட நான் கடைசி காலத்துல சொல்லணும். எங்கப்பா என்னை நல்லா வளர்த்தார்னு அவன் சொல்லணும். அதுதான் முக்கியம். அதுக்கு நான் அதுமாதிரி நடந்து காட்டணும். ஏன்னா, எம் பசங்களுக்கு நான்தான் ஹீரோ. நான் செய்யறதுதான் சரின்ற நம்பிக்கை வரணும். அதை எங்க அப்பாகிட்டே நான் நடந்துக்கற முறை கத்துக் குடுக்கும்.

நமக்கும் வயசாவும். நாளைக்கு எம் பையனும் அப்பா ஆவான். அவன் வாழ்க்கையையும் இதேபோல சம்மர் லீவுன்னு ஒண்ணு வரும். அப்போ அவன் என்னைத் தேடணும். அவனுக்காக மட்டுமில்லை.. அவனோட பசங்களுக்காகவும். அதுக்குத்தான் இவ்வளவும்... என்றார் இவர்.

அது வந்து.. என இழுத்தார் அவர்.

இதோ பாருங்க நண்பரே.. எம்மேல பாசமா இருப்பான்னு எம் பையன் என்னைக் கேட்கலை. ஆனா, நான் இருக்கேன். அதேமாதிரி, எம்மேல பாசமா இருப்பான்னு நான் அவனை கேட்க மாட்டேன். ஆனா, அவன் இருப்பான். அதுக்கு, பாசம், குடும்பம், உறவுன்னா அவனுக்குத் தெரியணும். ஒரு அப்பாவா நான் தெரிய வைக்கிறேன். எனக்கு எங்கப்பா கத்துக் குடுத்ததை நான் கத்துக்குடுக்றேன். இதுதான் இப்போதைக்கு தேவையான கோச்சிங் கிளாஸ். நாம விதைச்சது பெரிய மரமாகறது முக்கியம்னு சில பேர் எண்ணம்.

அது விஷமரமா யாருக்குமே பயனில்லாம போயிடக் கூடாதுங்கறது என் எண்ணம்.

தலைமுறைங்கறது நாம மட்டுமே இல்லை. நமக்கு முன்னாடி இருந்ததுங்கறதை நாம நிரூபிக்கறோம். நமக்குப் பின்னாடியும் இருக்கணும். அதையும் நிரூபிக்க வைக்கணும். அதுக்கு குடும்பம், உறவுகளை விட சிறந்த பல்கலைக்கழகம் எதுவுமே இல்லை.

சரி விடுங்க. நீங்க சம்மர் டூர் எங்க போறீங்க. ? கேட்டார் இவர்.

சிறிது நேர மௌனத்திற்குப் பின் சொன்னார் அவர்..

என் தலைமுறையை எம் பசங்களும் புரிஞ்சுக்கற இடத்துக்கு.

நானும் புரிஞ்சுக்கணுமே...


வெளியேறும்போது அவர் மனதில் நிறைவு நடையிலேயே தெரிந்தது.

உறவுகளோடு வாழ்வதைவிட, வேறெதையுமே வாழ்க்கை நம்மிடம் எதிர்பார்க்கப் போவதில்லை.

ஏனெனில், உறவுகள்தான் வாழ்வின் படிப்பினை... அனுபவம் கற்றுத்தரும் ஆசான்.

**- என். நரசிம்மன், திருவள்ளுவர் மன்றம்**

# பணம்



கவிஞர் மருதூர்
ஆறுமுக. ராஜமாணிக்கம்

பணம் பணம் பயத்தில் பணம்
பதுக்கும் பணம் பயத்தில் பணம்
மனம் முறிக்கும் பணம் பணம்
மனத்தை உறுக்கும் மமதை பணம்

இனத்தை ஒதுக்கும் இருப்புப் பணம்
சனத்தை ஒதுக்கும் சம்பாதித்த பணம்
கனத்தைக் கொடுக்கும் களவாடும் பணம்
சினத்தைக் கொடுக்கும் சிறுபணம்

வானத்தை அளக்கும் வாங்கிய பணம்
வனத்தை வளர்க்கும் பாசனப் பணம்
வஞ்சத்தை வளர்க்கும் கொஞ்சப் பணம்
வஞ்சத்தைப் பெருக்கும் கெஞ்சும் பணம்

பஞ்சத்தைப் போக்காது பாழும் பணம்
பாசத்தை வளர்க்காது பரம்பரைப் பணம்
பத்தைப் பத்தாக்கும் வட்டிப் பணம்
பதைபதைத்து வாழ்ந்திடுவார் வட்டி பணம்

நெஞ்சத்தை நிமரவைக்கும் நேர்மைப் பணம்
நெடுநாள் பயணிக்கலாம் நேர்மைப் பணம்
நடுநிலையுடன் சம்பாதிக்கும் நல்ல பணம்
படுநிலைவராது ஆயுளுக்கும் நல்ல பணம்

# எம் பதில்கள்

**1. தமிழகத்துக்கு புதிய டி.ஜி.பி. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரே!**

**என்.ஆனந்த், விருகம்பாக்கம்.**

திரு ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் தமிழக வெற்றி கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்ற உடன் காவல்துறையில் பல்வேறு மாற்றங்களை செய்து வருகிறது. அந்த வகையில் கடந்த திமுக ஆட்சியில் நீண்ட நாட்களாக டி.ஜி.பி. பதவிக்கு யாரும் தேர்ந்தெடுக்கப்படாமல் பொறுப்பு டி.ஜி.பி .தான் இருந்து வந்தார். இந்த நிலையில் புதிய டி.ஜி.பி. பொறுப்பேற்று இருக்கிறார்.

தமிழகத்தின் புதிய டி.ஜி.பி. பதவிக்காக ராஜீவ் குமார், சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் மகேஷ் குமார் அகர்வால் ஆகிய 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான பட்டியல் யு.பி.எஸ்.சி.க்கு அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக டெல்லியில் நடந்த கூட்டத்தில் இந்த 3 பேர் கொண்ட பட்டியலுக்கு யு.பி.எஸ்.சி. ஒப்புதல் அளித்தது. அவர்கள் 3 பேரில் ஒருவர் விரைவில் டி.ஜி.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

காவல்துறையில் மிக உயரிய பதவியாக விளங்கும் தமிழக டிஜிபி பதவிக்கு ஐபிஎஸ் அதிகாரியான மகேஷ்குமார் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



1994ம் ஆண்டு பேட்ச் தமிழ்நாடு கேடர் ஐபிஎஸ் அதிகாரி மகேஷ்குமார் அகர்வால். சிபிஐ, சிபிசிஐடி உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளில் இருந்தவர். தற்போது புதுடெல்லியில் எல்லை பாதுகாப்பு படை டிஜிபியாக பணியாற்றி வருகிறார் மகேஷ் குமார் அகர்வால்.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் மகேஷ்குமார் அகர்வால் ஐபிஎஸ். இவருடைய தந்தை வழக்கறிஞர் என்பதால் சட்டம் படித்துவிட்டு, காவல்துறையில் நுழைந்தவர். தன்னுடைய 22வது வயதில் (1994) சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று ஐபிஎஸ் அதிகாரியாக தனது பணியை தொடங்கினார். பிறகு,பல்வேறு முக்கிய காவல்துறை பொறுப்புகளில் பணியாற்றி இருக்கிறார்.

குறிப்பாக, சேலத்தில் இருந்து சென்னை வந்த ரெயிலில் ரூ.5.78 கோடி கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவத்தில் இவர் தலைமையிலான சிபிசிஐடி தான் கொள்ளையர்களை கைது செய்தது. மேலும், சென்னை சென்ட்ரல் ரெயில் நிலைய குண்டுவெடிப்பு, சென்னை பெண் என்ஜினியர் உமா மகேஸ்வரி கொலை போன்ற வழக்குகளில் திறம்பட விசாரணை நடத்தி இருக்கிறார்.

சென்னை போக்குவரத்து துணை ஆணையராகவும் பதவி வகித்தவர். சென்னை பூக்கடை காவல்துறை துணை ஆணையராக பணிபுரிந்தவர். தூத்துக்குடி எஸ்.பி. ஆக இருந்தவர். சிசிடிவி கேமராக்களை சென்னையில் நிறுவ க்கியமாக செயல்பட்டவர். மெச்சத்தகுந்த பணிக்காக முதல்வர் பதக்கத்தைப் பெற்றவர்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக எதிர்க்கட்சிகள் பிரச்சனை எழுப்பு வரும் இந்த வேளையில் புதிய டி.ஜி.பி.யாக பொறுப்பேற்றிருப்பது அந்த துறைக்கு பொருத்தமானவர் என்ற கருத்து பலராலும் பேசப்பட்டு வருகிறது. அவருக்கு மித்ரா டைம்ஸ் மாத இதழ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்

கொள்கிறோம்.

**2. பெண்கள் பாதுகாப்புக்காக முதல்வர் போட்ட முதல் கையெழுத்து பற்றி...**

**சிவகாமி.ச., வேலூர்**

போதைப் பொருட்கள் நடமாட்டத்தால் தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதனால் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு உள்ளதால் இதற்கு ஒரு முடிவு கட்ட தமிழக வெற்றிக்கழகம் ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் முதலமைச்சர் போட்ட 3 கையெழுத்துகளில் ஒன்று தான் தமிழ் பெண்களின் பாதுகாப்புக்கு உறுதி செய்யும் வகையில் சிங்கப்பெண் அதிரடிப்படை அமைக்கும் திட்டமாகும். சிங்கப்பெண் அதிரடிப்படை (Singappen Task Force) திட்டம் என்பது தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தொடங்கப்பட்டுள்ள பிரத்யேகமான காவல்துறை திட்டமாகும்.

இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்த சிறப்பு அதிரடிப்பிரிவின் ஐ.ஜி.யாக (மிநி) கே. பவானீஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க, எஸ்.பி., டி.எஸ்.பி., காவல் ஆய்வாளர்கள், மற்றும் உதவி ஆய்வாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த படையில் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

பெண்கள் பாதுகாப்புக்கான இந்த சிங்கப்பெண் அதிரடிப்படைக்கு மேலும் 2 உதவி ஆய்வாளர்கள் உள்பட 18 காவல்துறையினர் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழக காவல்துறை அண்மையில் உத்தரவிட்டுள்ளது.





பெண்களின் பாதுகாப்புக்காக அறிவிக்கப்பட்ட இந்த 'சிங்கப்பெண்' அதிரடிப்படை திட்டத்தின் தொடக்க விழா விரைவில் துவங்க இருக்கிறது.

**3. பத்மஸ்ரீ விருது தமிழகத்தில் ஏழு பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறதே!**

**திருஞானசம்பந்தம். திருவள்ளூர்**

புதுடெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் 2026ஆம் ஆண்டிற்கான முதற்கட்ட பத்ம விருதுகள் வழங்கும் விழா குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாட்டை சேர்ந்த இருவருக்கு 2 பேருக்கு பத்ம பூஷனும், 11 பேருக்கு பத்ம ஸ்ரீயும் இந்த விழாவில் வழங்கப்பட்டன. புதுச்சேரியைச் சேர்ந்த புகழ்பெற்ற சிலம்பக் கலை மாஸ்டரும், பாரம்பரியக் காவலருமான திரு கே. பழநிவேல், சமூகப்பணிக்காக எஸ்.கே.எம்.மயிலானந்தன், மருத்துவப்பணிக்காக கே.ஆர். பழனிசாமி ஆகியோருக்கு பத்ம பூஷன் வழங்கப்பட்டது.

அறிவியல் மற்றும் பொறியியல் துறை பணிக்காக சென்னை ஐஐடி இயக்குனர் வி. காமகோடிக்கு பத்ம ஸ்ரீ வழங்கப்பட்டது.

அதேபோல, கே. ராமசாமி (அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்), டாக்டர் புன்னியமூர்த்தி நடேசன் (மருத்துவம்), ராஜஸ்தபதி காளியப்ப கவுண்டர் (கலை), ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன் (கலை), திருவாரூர் பக்தவத்சலம் (கலை), ரஞ்சனி பாலசுப்ரமணியன் மற்றும் காயத்ரி பாலசுப்ரமணியன் (கலை), சிவசங்கரி (இலக்கியம் மற்றும் கல்வி), எச்.வி. ஹண்டே (மருத்துவம்), (மறைவுக்குப் பின்) ஆர். கிருஷ்ணன் (கலை) ஆகியோருக்கு பத்ம ஸ்ரீ வழங்கப்பட்டது. தமிழகத்தைச் சார்ந்தவர்களுக்கு13 விருதுகள் வழங்கப்பட்ட மகிழ்ச்சியை தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தியது.



# தேன் நெல்லியின் சுவையான குணங்கள்!

கடைகளில் இருந்து தேன்நெல்லி வாங்கி சாப்பிடுகிறோம். இதன் நன்மைகள் என்னவென்று தெரியுமா?

இரத்த அணுக்களின் அளவு அதிகரிக்கும். இரத்த சோகை நீங்கும் ரத்தம் சுத்திகரிக்கப்படும்.

இதயத்தில் உள்ள தசைகள் வலிமை அடையும். முகம் பொலிவு பெறும்.



ரோம கால்கள் வலுவடைந்து முடிகொட்டுவது தவிர்க்கப்படும்.

கண்களில் எரிச்சல், நீர் வடிதல், கண்கள் சிவப்பாதல் போன்றவை குணமாகும்.

தினமும் ஒரு வேளை தேன்நெல்லி சாப்பிட்டு வந்தால் தொண்டைப் புண்ணால் அவதிப்படுபவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

சளி தொல்லை உள்ளவர்களுக்கு உடலில் உள்ள சளி அனைத்தும் வெளியேறும்.

சிறுநீர் மற்றும் சிறுநீரகம் தொடர்பான பிரச்சனைகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும். அசிடிட்டி சம்பந்த பிரச்சனை உள்ளவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

எங்களிடம் சுத்தமான தேன் , மற்றும் தேனில் ஊறவைத்த இரண்டு வகையான தேன் நெல்லி , ரோஜா குல்கந்து, Herbal hair oil, Health Mix Powder & Herbal bathing Powder கிடைக்கும்.

வெளியூர் வாசிகளுக்கு கூரியர் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்புக்கு :

**இயற்கை தேன் பண்ணை,**

**Cell : 9043759529 ; 9944506122**



# தமிழுக்கு பெருமை சேர்க்கும்
# பஹ்ரைன் வாழ் தமிழர்!

**வ**ளைகுடா நாடுகளில் எண்ணெய் வளத்துறையில் முன்னணியில் உள்ள “பஹ்ரைன் ஸ்பெஷல் டெக்னிகல் சர்வீசஸ் எஸ்டிஎஸ்” எனும் நிறுவனத்தில் கொள்முதல் மேலாளராக கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் தமிழர்.. ஆங்கில திறமையுடன் தமிழ் புலமையும் ஒன்றுசேர இருப்பதால் பஹ்ரைனில் “செந்தமிழ் சொல்வேந்தர் பேரவை” அமைப்பின் புரவலராக, முத்தமிழ் சொல்வேந்தர் அமைப்பின் வழிகாட்டியாக மற்றும் பல தமிழ் அமைப்புகளில் முக்கிய பங்கு வகிப்பவராக திகழ்பவர்.. தில்லி கலை இலக்கிய பேரவையின் துணைத்தலைவராக திகழ்பவர்.. Goju-Ryu கராத்தே பிளாக்பெல்ட்.... ஆக இருக்கும் இவர் படப்பை பழனி தற்காப்பு கலை பயிற்சி மைய ஆலோசகராக இருக்கிறார்..

இவ்வளவு சிறப்புகளையும் ஒருங்கே பெற்ற உன்னதமான மாமனிதராக.. தமிழ் மேதையாக திகழ்கிறார் பக்ரைன் வாழ் தமிழர் திரு.கா.பொன்.சங்கரபாண்டியன் அவர்கள்..

பல்வேறு ஆளுமைகளிடமிருந்து...

மேன்மைமிகு சொல்வேந்தர் விருது!



குடும்பத்துடன் பொன் சங்கர பாண்டியன்

சாதனை தமிழன் விருது!

புலம்பெயர் தமிழ் சான்றோர் விருது!

தமிழ் மாமணி விருது!

கலைச்சுடர் விருது!

சேவா ரத்னா விருது!

அன்னைத்தமிழ் அமுதசுரபி விருது!

பாரதிச்சுடர் விருது!

டாக்டர்.அப்துல் கலாம் விருது!

இலக்கியச் செம்மல் விருது!

செந்தமிழ் செம்மல் விருது!

உள்ளிட்ட விருதுகளை வழங்கி இவரை தமிழ் அமைப்புகள் கௌரவப் படுத்தியுள்ளன.

இவரது மனைவி திருமதி.பிரவீணா (எம்.பி.ஏ) மூத்த மகன் சர்வேஷ், டாக்டருக்கு படிக்கிறார்.

இளைய மகன் ரிஷி ஆகியோரை நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்று தமிழுக்கு தரப்பட வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்.

சிறு வயது முதலே உழைப்பின் மீது ஈடுபாடும் ,தெய்வ நம்பிக்கையும் அதிகம் கொண்டிருப்பவர்.

சென்னை கோடம்பாக்கத்தில் காளிராஜன்அஞ்சாதேவி தம்பதிக்கு பிறந்த ஒரே மகன். சென்னையில் பள்ளிப்படிப்பு... சென்னை கல்லூரியில் டிப்ளமோ இன் மெக்கானிகல் இன்ஜினியரிங் மூன்று வருட படிப்பு.. சென்னை பல்கலைகழகத்தில் PGDMM எனும் Post Graduate Diploma in Materials Management படிப்பு முடித்து, அஞ்சல் வழியாகவும், தொலைதூரக்கல்வி வழியாகவும் அமெரிக்காவின் டெக்ஸாஸ் யூனிவர்சிடியில் CSCM எனும் Certified Supply Chain Manager பட்டமும் நிறைவாக International School of Business Management மூலமாக Doctorate in Supply Chain




பல்வேறு விருதுகள் பெறும் பொன் சங்கர பாண்டியன்

Management படிப்பை முடிவு செய்து "முனைவர்" பட்டம் என்று தனது கல்வித் தகுதியை படிப்படியாக உயர்த்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டில் இருந்தாலும் தாய் நாட்டை மறக்காமல் ஆன்மீகப் பணியையும் தமிழ் பணியையும் தொடர்ந்து செய்து வரும் திரு பொன் சங்கர பாண்டியன் அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சியிலும் வெற்றி பெற மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்து தெரிவிக்கிறோம்.

தொகுப்பு:

மூத்த பத்திரிக்கையாளர்

**விஜயா கண்ணன்,** மதுரை.

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 June 2026
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027



மித்ரா பிக்சர்ஸ் படத்துவக்க பூஜையில் பீப்பிள் ஸ்டார் திரு.எம்.எஸ்.மூர்த்தி குடும்பத்தினர்...

From:

MITRA TIMES ,Tamil and English monthly 101,Inchakkal Block, Chitra Avenue 9, Choolaimedu High Road, Chennai .600094. 044-23744661,23743007/8. mitratimes2015@gmail.com, www.mitratimes.com

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY